# பாட்டாளி சிந்தனை

Volume 29 No. 3 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

November 2018 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5

## மாபெரும் நவம்பர் புரட்சி 101வது ஆண்டு நிறைவு



V I லெனின்



J V ஸ்டாலின்

## இந்திய உயர் கல்வி ஆணையம், மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள்

# உயர் கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி மீதான பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் பகிரங்கத் தாக்குதல் – கார்ப்பொரேட் துறைக்குப் பணிந்துபோகும் வெட்கக்கேடான செயல்

கல்வி மீது ஆளும் ஆர்எஸ்எஸ்–பாஜக தொடுத்து வரும் தாக்குதல்கள் எவ்விதத் தடையுமின்றி பல்கிப் பெருகிவருகின்றன. கல்வியில் இந்துத்துவாவைப் புகுத்த வேண்டும் என்ற அவர்களது பிரதான நோக்கத்திற்கு ஏற்றவாறு ஒவ்வொரு நாளும் புதிய புதிய வடிவங்களில் திட்டங்கள் எவ்வித எதிர்ப்புமின்றி தடையில்லாமல் திணிக்கப்படுவதுபோல் தெரிகிறது. இதன் ஒரு பகுதியாக, ஆர்எஸ்எஸ்–பாஜக வழிகாட்டுதலில் செயல்படும் மத்திய அரசாங்கம், இரண்டு வாரங்களுக்குள் கொண்டுவந்துள்ள இரு நடவடிக்கைகள் நாட்டின் உயர்கல்வி மீது மிக மோசமான, ஆபத்தான நீண்டநாட்களுக்கு பாதிப்பை உண்டாக்குவது நிச்சயம்.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் (Ministry of Human Resources and Development – எம்ஹெச்ஆர்டி) 27 ஜுன் 2018 அன்று ஒரு பத்திரிகை செய்திமூலம் 60 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டுவரும் யுஜிசியை கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக அதிகாரமிக்க இந்திய உயர்கல்வி ஆணையத்தை (ஹெச்இசிஐ) உருவாக்குவதற்காக இந்திய உயர்கல்வி ஆணையம் (யுஜிசி சட்டம் 1956ஐ திரும்பப்பெறுதல்) மசோதா 2018ஐ அறிமுகப்படுத்தியது. இது ‘கல்வித் தரத்தையும் உயர்கல்வியின் தரத்தையும் மேம்படுத்துவதை’ நோக்கமாகக் கொண்டிருக்கிறது, இது ஒரு ‘மைல்கல்’ என்று அமைச்சகம் பெருமிதமாகக் கூறியது. கட்டமைப்பை மாற்றுவதாலேயே தரம் உத்திரவாதப்படுத்துமா என்ற கேள்விக்கு பதிலேதுமில்லை. இத்தகைய முடிவு உண்மையில் ஒரு மைல்கல்தானா என்பதும் கூட கேள்விக்குரியதாகும். அப்படியிருக்கையில் இது அறியாமையின் மைல்கல்லா, அல்லது பித்தலாட்டத்தின் மைல்கல்லா!

இது ஒன்றும் புதிதல்ல. உயர் கல்விக்கான சுதந்திரமான ஒழுங்குமுறை ஆணையம் ஐஆர்ஏஹெச்இ (Independent Regulatory Authority for Higher Education) அமைக்க வேண்டும் என்று 2006இல் தேசிய அறிவுசார் ஆணையம் (National Knowledge Commission) பரிந்துரைத்தது. 2009இல் யஷ்பால் கமிட்டியும் உயர்கல்வி ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம் என்சிஹெச்இஆர். (National Council for Higher Education and Research) அமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இவையும் கூட ஏற்கனவே இருந்த யுஜிசி போன்ற அமைப்புகளைக் கலைத்துவிட்டு அனைத்து அதிகாரங்களையும் மத்தியில் குவிக்க வேண்டும் என்றே கூறின. ஆனால் இவற்றிற்கு நாடுமுழுவதுமுள்ள கல்விச் சமுதாயத்தின் எதிர்ப்பும் விமர்சனமும் கிளம்பியது. ஆக ஹெச்இசிஐ என்பது புதிய ஐடியாவும் அல்ல, மைல் கல்லும் அல்ல! பழைய கள், புதிய மொந்தையில்!

இதற்கு சற்றும் குறைவில்லாத மற்றொரு பத்திரிகை செய்திக் குறிப்பு எம்ஹெச்ஆர்டியால் 9 ஜுலை 2018 அன்று வெளியிடப்பட்டது. அதில் மேலதிகாரம் பெற்ற நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அது தனது அறிக்கையில் 6 கல்வி நிறுவனங்களை மட்டும் (3 பொதுத்துறை, 3 தனியார் துறை) “மாண்புமிக்க கல்விநிறுவனங்கள்’ (Institutions of Eminence - ஐஒஇ) என்று அறிவிக்க பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த 6 நிறுவனங்களில் பாஜகவோடு நட்பாக இருக்கும் அம்பானி குழும ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஜியோ இன்ஸ்டிட் யூட்டிற்கு ஒரு தனிச்சிறப்பு உள்ளது. காரணம், அப்படியொரு நிறுவனம் இன்னும் துவக்கப்படவேயில்லை. அதற்கென ஒரு இணையதளம் கூட இல்லை. முன்பு, காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் நாட்டில் சில கல்வி நிறுவனங்களை தனிசிறப்புமிக்க மையங்கள் (Centres of Excellence) என்று யுஜிசி அங்கீகரித்திருந்தது. அப்படியிருந்தும் நாட்டில் கல்வியில் இன்னும் முன்னேற்றம் காணப்படவில்லை. இப்போதைய பாஜக தலைமையிலான ஆட்சியின்கீழ் இன்னும் துவக்கப்படாத ஒன்றையும் உள்ளிட்ட 6 மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள் துவக்கப்படவுள்ளன. அத்தகைய துவக்கமும் போலியான ஒன்றுதான்.

### இந்திய உயர்கல்வி ஆணையம் (யுஜிசி சட்டம் 1956ஐத் திரும்பப்பெறுதல்) மசோதா கடந்துவந்த பாதை

இந்த இரண்டும் வெவ்வேறானவையா, ஒன்றாக வந்ததால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதா, இல்லை இவற்றிற்கு ஆழமான தொடர்பு உள்ளதா? அதை சரிபார்ப்போம். முதலில், ஹெச்இசிஐ மற்றும் ஜியோ கல்வி நிறுவனத்தை மாண்புமிக்க நிறுவனம் என்று அறிவித்தது என இரண்டு விஷயங்களுமே ஒன்றை அம்பலப்படுத்தியுள்ளது, அரசாங்கத்தின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் எப்படி வடிவம் கொடுக்கப்படுகின்றன என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. ஹெச்இசிஐ கருத்து பின்வருமாறு ஆரம்பிக்கப்பட்டது.

யுஜிசியையும் ஏஐசிடிஇயையும் கலைத்துவிட்டு அதற்கு பதிலாக உயர்கல்வி மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம் (ஹெச்இஇஆர்ஏ) என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும் என்று ஜுன் 2017இல் எம்ஹெச்ஆர்டி முன்மொழிந்தது. இந்த முன்மொழிவு தொடர்பான எந்த ஆவணங்களும் வெளியிடப்படாத நிலையில் இரண்டே மாதங்களில் ஆகஸ்ட் 2017இல் இம்முடிவை அமைச்சகம் கைவிட்டது. ‘புதிய சட்டத்தை கொண்டுவருவதற்குப் பதிலாக தற்போதைய (யுஜிசி) அமைப்பையே மறு உருவாக்கம் செய்யலாம்’ என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்தார். ஆனாலும் கூட அடுத்த ஒரு ஆண்டுக்குள்ளாகவே தற்போதிருக்கும் யுஜிசியைக் கலைத்துவிட்டு சட்டம் மூலமாக ஒரு புதிய அமைப்பாக ஹெச்இசிஐயை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளனர்.

‘யுஜிசி’ இன் செயல்பாடுகள் தொடர்பாக மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆலோசனைகளை வரவேற்பதாகவும், இவை பாராளுமன்ற நிலைக்குழுவுக்கு 25 ஜுன் 2018க்குள் வந்து சேர வேண்டும் என்றும் பாராளுமன்ற நிலைக்குழு சார்பாக ராஜிய சபா செயலாளர் 10 ஜுன் 2018 அன்று முன்னணி நாளிதழ்களில் விளம்பர அறிக்கை வெளியிட்டிருந்தார். 27 ஜுன் 2018 அன்று வெளியிடப்பட்ட

தொடர்ச்சி 2ம் பக்கம்

## இந்திய உயர் கல்வி ஆணையம் மசோதா

# உயர் கல்வியின் தன்னாட்சி மீதான புதிய தாக்குதல்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

அறிக்கையில் வரைவு சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது ஆலோசனைகளுக்காக பொதுத்தளத்திற்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறது. அதாவது 25 ஜூன் 2018 வரை ஆலோசனைகளை பெற்றுள்ளனர். கிடைத்த இரண்டே நாளில் (முழுமையாக இரண்டுநாட்கள் கூட அல்ல) வரைவு சட்டம் தயாராகிவிட்டது! அப்படியானால் ஆலோசனைகளை பரிசீலிப்பதற்கு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு இரண்டு நாட்கள் போதுமா? இல்லை ஆலோசனைகளே வரவில்லையா? இல்லை கண்துடைப்பிற்காக ஆலோசனைகளை கேட்டுவிட்டு, ஏற்கனவே வரைவு சட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டதா? முடிவை உங்களிடமே விட்டுவிடுகிறோம்! 27 ஜூனில் வெளியிடப்பட்ட வரைவு சட்டம் 7 ஜூலை 2018 வரை ஆலோசனைகளைப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் கால அவகாசம் போதாது என்று எதிர்ப்பு கிளம்பியதால் அது 20 ஜூலை வரை நீட்டிக்கப்பட்டது. இ மெயில் விரைவாகச் சென்றடைந்துவிடும். ஆனால், யுஜிசியைக் கலைப்பது, அதற்குப் பதிலாக புதிய ஆணையம் அமைப்பது போன்ற முக்கியமான விஷயத்தில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், பெற்றோர்களிடையே அர்த்தமுள்ள வாதப் பிரதிவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள், கருத்து உருவாக்கங்கள் நடத்துவது எல்லாம் 3 வாரத்தில் நடக்கின்ற ஒன்றா? இவற்றையெல்லாம் பார்த்தால் : நாங்கள் ஆலோசனைகளை வரவேற்றோம், ஏராளமான ஆலோசனைகள் வந்தன (அவற்றை யார் அனுப்பினார்கள் என்று யாருக்கு தெரியும்), அதைவைத்துதான் முடிவெடுத்துள்ளோம், எனவே எங்களது முடிவு ஜனநாயகபூர்வமாக எல்லோரையும் உள்ளடக்கி எடுக்கப்பட்டது, என்று கூறுவதற்கான நடவடிக்கையா இது? இது இரட்டை வேடமில்லையா, பல தலைமுறைகளின் வாழ்க்கை சம்மந்தப்பட்ட கல்வி போன்ற முக்கியமான பிரச்சினையில் இவ்வாறு நடப்பது மக்களுக்கு செய்யும் துரோகமில்லையா?

எப்படிப்பார்த்தாலும், நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல 'சுதந்திரமாக அறிவைப் பெறுவதற்காகவும் புதுமைக்காகவும்' தன்னாட்சியை கொண்டு வருகிறோம் என்ற அதே பெயரில் உயர் அதிகாரமிக்க மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பு என்ற கருத்து ஐஆர்ஏஹெச்இ, அல்லது என்சிஹெச்இஆர் முன்மொழிவிலேயே வந்தது. ஒரு மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பு எப்படி தன்னாட்சியையும் உத்திரவாதப்படுத்த முடியும், இதை கொள்கை வகுப்பாளர்கள் தான் மக்களிடம் விளக்க வேண்டும். ஆனால், கல்வி போன்ற பிற 'சேவைத் துறைகளை' உலக சந்தைக்குள் கொண்டுவரவேண்டும் என்று கூறும் காட்ஸ் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களைப் பின்பற்றி கொண்டு வரப்படும் 'சீர்திருத்தங்கள்' என்று அழைக்கப்படும் திருத்தங்களை எல்லாம் எதிர்ப்பின்றி இலகுவாக நடைமுறைப்படுத்துவதற்காகத்தான் இத்தகைய அதிகாரம் மையப்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. கல்வியை உலகளாவிய சந்தைச் சரக்காக்கி, அதை மேலும் தனியார்மயம், வியாபாரமயமாக்க வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும். இதை நாட்டிலுள்ள கல்வியாளர் சமுதாயம் நிராகரித்தது, எனவே அப்போது இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

தற்போது, பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அதே விஷயத்தை வேறொரு பெயரில் கொண்டுவருகிறது, அதை மைல்கல் என்று பறைசாற்றுகிறது. இந்த வரைவு மசோதாவில் முக்கிய விஷயம் என்னவென்றால்,

1. 'ஆராய்ச்சியை முன்மொழிவது', நிதி உதவிக்காக 'அரசாங்கத்தோடு ஒருங்கிணைப்பது' ஆகிய பணிகளை மட்டுமே ஹெச்இசிஐ செய்யும்; நிதி வழங்கும் உண்மையான அதிகாரம் மத்திய மனிதவள மேம்பாட்டு ஆணையத்திடமே இருக்கும், இதில் ஏதேனும் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டால், அரசாங்கத்தின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

2. யுஜிசியின் தலைவர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர் 'மத்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் அதிகாரியாக இருக்கக்கூடாது' என்ற நிபந்தனையை யுஜிசி சட்டம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. ஆனால் இந்த நிபந்தனையை தற்போது முன்மொழியப்பட்டுள்ள ஹெச்இசிஐ நீக்கிவிட்டது. இதில் இரண்டே கல்வியாளர்தான் இடம்பெறுவர் மீதமெல்லாம் உயர் அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளுமே இருப்பர். ஹெச்இசிஐயின் தலைவர், துணைத் தலைவர், 12 உறுப்பினர்கள் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். கேபினட் செயலாளர், உயர்கல்வித்துறை செயலாளர் மற்றும் 3 கல்வித்துறையை சேர்ந்த உறுப்பினர்கள் சேர்ந்து இதன் தலைவரைத் தேர்வு செய்வர். ஆக, மொத்தமாகப் பார்த்தால் கல்வித் துறையைப் பற்றி மட்டும் பேசுவதற்கான ஆணையம் முழுக்க முழுக்க உயர் அதிகாரிகள்–அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். இங்கே தான்னாட்சி எப்படி இருக்கும்? மாறாக, என்னதான் பல்வேறு தலையீடுகள் இருப்பினும் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விஷயங்களில் இன்னமும் கல்வியாளர்கள்தான் பங்காற்றுவதற்கு ஏதுவாக உள்ள யுஜிசியின் குறைந்தபட்ச ஒப்பீட்டளவிலான சுதந்திரமும் கூட ஒழிக்கப்பட்டுவிட்டது.

இங்கே சில கசப்பான உண்மைகளை ஒப்புக் கொள்ள வேண்டும். 62 ஆண்டுகளுக்கு முன்னர் 1956இல் உருவாக்கப்பட்ட யுஜிசியானது மத்திய, மாநில பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி தருவது, அனைவருக்கும் தரமான கல்வியை உத்திரவாதப் படுத்துவதற்காக அவற்றிற்கு நிதி உதவி வழங்கும் அமைப்பு என்று கருதப்பட்டது. இருந்தபோதிலும், அதன் கடந்தகால வரலாற்றைப் பார்த்தால், மத்தியில் ஆட்சியிலமர்ந்த எந்தக்கட்சியானாலும் சரி, அது உயர்கல்வியைக் கட்டுப்படுத்தும் கைப்பாவையாக யுஜிசியை மாற்றிவிட்டது என்பது தெளிவு.

உதாரணத்திற்கு, நவீன விஞ்ஞான படிப்புக்கு மாறாக ஜோதிடம், இந்தியமயம், சமஸ்கிருதம், புராதன இந்திய ஆன்மீக தத்துவம் போன்ற படிப்புகளை அறிமுகப்படுத்தவும், தன்னாட்சியை அழிக்கக்கூடிய வகையில் தரவாரி தன்னாட்சி வழங்குதல், ஏன் சமீபத்தில்கூட 29, செப்டம்பர் 2017இல் பாகிஸ்தான் மீதான 'துல்லியத் தாக்குதல்' நாளை (Surgical Strike) பல்கலைக்கழகங்கள் உரிய வகையில் அனுசரிக்க வேண்டும் என்று உத்தரவிடுவதற்கும் யுஜிசியை பாஜக அரசாங்கம் பணித்தது. இவையெல்லாவற்றையும் பார்க்கையில் எவ்வித (குறிப்பாக அரசாங்கத்தின்) தலையீடுமில்லாமல், தன்னாட்சியோடு, உயர்கல்வி வாய்ப்பை அதிகமாக வழங்குவதில் உள்ள சவால்கள், ஆராய்ச்சிகளை முன்நோக்கி கொண்டு செல்லுதல், மத்திய அல்லது மாநில அரசாங்கங்கள் நடத்தும் உயர்கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டை துரிதப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யுஜிசி சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டியது அவசியமாகிறது. ஆனால் இதற்குப்பதிலாக, இந்த சட்டத்தையே முற்றிலுமாக திரும்பப்பெறுவதென்று அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

யுஜிசியைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக மத்திய அரசாங்கத்தின் மையப்படுத்தப்பட்ட அதிகாரமிக்க ஹெச்இசிஐ ஐக் கொண்டுவருவதன் மூலம் இதுவரை பொதுப்பட்டியலில் இருக்கும் கல்வியை முழுமையாக மத்தியப் பட்டியலுக்குக் கொண்டு சென்று இனி கல்வி விவகாரங்களில் மாநிலங்களின் பங்கை மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்துகிறது. கல்வி நிலையங்களின் நிர்வாக விவகாரங்களில் இனிமேலும் தலையிடுவது இல்லை என்ற அரசாங்கத்தின் வார்த்தைஜால முழக்கங்கள் செல்லாதவை, கேலிக்கூத்தானவை, இரட்டை வேடம் என்றாகிறது.

'தரம் குறைந்த', 'போலி' கல்வி நிறுவனங்களை மூடும் உத்தரவை வழங்கும் அதிகாரம் ஹெச்இசிஐக்கு வழங்கப்படுகிறது. ஏற்க மறுத்தால் அபராதங்களும், சிறை தண்டனையும் கூட விதிக்கப்படலாம். என்னே ஒரு நயவஞ்சக திட்டம்! யதார்த்தத்தில், தண்டனையிலிருந்து தப்புவதற்காக 'தரமாக' இருப்பதைப் போன்று காட்டிக்கொள்ள கல்வி நிறுவனங்கள் எத்தனிப்பார்கள். நிதிவழங்கும் சாட்டை அரசாங்கத்திடம் இருப்பதால் தங்கள் செயல்பாட்டிற்காக சொந்த நிதியைச் சார்ந்திருக்கும் நிலைக்கு கல்விநிறுவனங்கள் தள்ளப்படும். இதனால் அதீதமாக கல்விக் கட்டணம் உயர்த்தப்படும், சுயநிதிப் பாடப்பிரிவுகளே தொடங்கப்படும், அதுவும் பொது–தனியார் கூட்டு முறைப்படியே இருக்கும். இதனால் கல்வி தனியார்மயம்–வியாபாரமயமாக்குவது மேலும் உக்கிரமடைந்து, சாமானிய ஏழைக் குடும்ப மாணவர்களுக்கு கல்வி மேலும் எட்டாக்கனியாகிவிடும். அதோடு அரசாங்கம் அடிக்கடி முழங்கும் தரம் என்பது மிகமோசமான பலிகடாவாகிவிடும். அதீத வியாபாரமயமாக்குவது என்பது லாப நோக்கமுடைய கல்வி நிறுவனங்கள் புற்றீசல்கள்போல் உருவாவதற்குத்தான் உதவுமே தவிர அவை கல்விக்கு எந்த சேவையும் செய்யாது. இது ஏற்கனவே தர வீழ்ச்சியிலிருந்து, குறிப்பாக பொறியியல், மருத்துவக் கல்வியின் தரச்சீரழிவிலிருந்து நிரூபணமாகிவிட்டது. அறிவியல் பாடங்களில் குறை மதிப்பெண்கள் (நெகடிவ் மதிப்பெண்) எடுத்த மாணவர்கள் தங்களின் பணத்தைக் கொண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 'சுய நிதி' இடங்களில் சேர்ந்துள்ளனர் என்பது வெளியாகியுள்ளது. மற்றொருபுறம் ஏராளமான தொகைகளை செலுத்தி தனியார் கல்லூரிகளில் எம்பிஏ அல்லது பொறியியல் பட்டங்களைப் பெற்றவர்கள் தற்போது பியூன் இடங்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கின்றனர். தற்போது தரத்திற்காக வாதாடுவதாகக் காட்டிக்கொள்ளும் பாஜக தனது ஹெச்இசிஐ மூலம் இந்த சீர்கேட்டை மேலும் அதிகப்படுத்தவே செய்யும்.

பிடி அரசாங்கத்தின் வசம் இருக்கும். ஆக, பாடங்கள் விவகாரத்திலும் ஹெச்இசிஐ சுதந்திரமாக செயல்பட முடியாது. ஆளும் ஆர்எஸ்எஸ்–பாஜக கல்வியைக் காவிமயமாக்குதல், வரலாற்றை காவிவழியில் திருத்தி எழுதுதல், ஒரு குறிப்பிட்ட, அதாவது இந்து கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் பாடப்புத்தகங்களில் திணித்தல், பழமைவாத, மூடநம்பிக்கைகள், ஏன், மதவாத அல்லது காலாவதியான, தர்க்கத்திற்குப் புறம்பான விஷயங்களைக்கூட பாடங்களில் சேர்க்க வேண்டும் என்ற தங்களது திட்டத்தை நுழைப்பதற்கு விடாப்பிடியாக முயற்சித்து வருகின்றனர். தங்குதடையற்ற மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு இந்த போக்கை மேலும் அதிகப்படுத்தும்.

### கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு தன்னாட்சி உத்திரவாதப்படுத்தப்பட வேண்டும்

இவ்விஷயத்தில் ஒருபுறம் அரசாங்கத்தின் கொள்கைகள்தான் கல்வித்தரம் சீரழிவதற்குக் காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது, மற்றொருபுறம் இதே அரசாங்கங்கள்தான் தரம் தரம் என்று கூவுகிறது. இத்தகையக் கொள்கைகளின்படி பட்ஜெட்டில் கல்விக்கான நிதி ஒதுக்கும் சதவீதமானது (3.8%) என்றாகி, நாட்டை 121 ஆவது அடிமட்டத் தரத்திற்கு இட்டுச்சென்றுள்ளது. மொத்தக் கல்விக்கே இவ்வளவு குறைவான தொகை என்றால், அதிலும் சொற்பம்தான் உயர்கல்விக்கு வழங்கப்படுகிறது. அந்த சொற்பத்தொகையும் பெரும்பாலும் ஒரு சில முன்னணி கல்வி நிறுவனங்களுக்கே ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ள பெரும்பாலான உயர்கல்வி நிறுவனங்கள் நிதியில்லாமல் திண்டாடுகின்றன. மற்றொருபுறம், சிபிசிஎஸ் அல்லது செமஸ்டர் முறை ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு அவை முழுமையான மனிதனை–மனிதனாக்கும் குணாம்சத்தைக் கட்டியெழுப்பும் விஞ்ஞானபூர்வ, மதச்சார்பற்ற கல்வி வழங்குவதில் மிகப்பெரிய பாதிப்பை உருவாக்கிவிட்டன. அதிக மதிப்பெண் பெறுவதற்காக இருக்கக்கூடிய பாடங்களில் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பாடங்களை தேர்வு செய்யும் வாய்ப்பை சிபிசிஎஸ் வழங்குகிறது. அதாவது இயற்பியல் பாடம் படிப்பவர் ஃபேஷன் டிசைன் படிக்கலாம் என ஒன்றோடொன்று தொடர்பில்லாத பாடங்களை படிக்க வைக்கிறது. இது மேலும் மேலும் உடனடி விளைவை வழங்கக்கூடிய பாடங்களை படிப்பதை மட்டுமே ஊக்குவிக்கிறதே தவிர எந்த ஒரு பாடத்தையும் முழுமையாகக் கற்கும் முனைப்பை உருவாக்கவில்லை. இதனாலும் கல்வித் தரம் சீரழிந்து வருகிறது. தற்போதைய கட்டமைப்பு வசதி, போதிய ஆசிரியர்கள் இல்லாமை, ஏராளமான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணிடங்கள் ஆண்டுக் கணக்கில் நிரப்பப்படாமல் இருப்பது, போதிய நூலகம்–ஆய்வக வசதிகள் இல்லாமை, அதோடு எப்படியாவது மாணவர்களை–ஆசிரியர்களை–ஊழியர்களை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அரசியல் கட்சிகளின் அதீதமான தலையீடுகள் இருக்கின்ற நிலையில், படிப்பதற்கு மாணவர்களுக்கு போதிய அவகாசம் தராமல் குறைந்த இடைவெளிகளில் மாணவர்களை தேர்வு எழுத வைப்பது, அதை பாரபட்சமின்றி விருப்பு வெறுப்பின்றி சரிபார்ப்பதற்கான போதிய நேரமும் ஆசிரியர்களுக்கு–வினாத்தாள் திருத்துபவர்களுக்கு அளிக்கப்படாமலும் உள்ளதால் செமஸ்டர் முறை பெரிய முன்னேற்றத்தைக் கொண்டுவரும் என்ற ஆசை நிராசையாகிவிட்டது. ஆக இப்படிப்பட்ட அமைப்பு உள்ள நிலையில் அதிகாரமிக்க மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பால் உயர்கல்வியில் கற்றல்–கற்பித்தலில் தரத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வர முடியாது. மாறாக, கல்வித் தரத்தில்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# ஆதார் திட்டம் – அமைப்பு முறையை பாதுகாப்பதற்காக அபாயகரமான வேவுபார்த்தலை உருவாக்கும் திட்டம்

பல ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டிருந்த ஆதார் வழக்கில் கடந்த செப்டம்பர் 26ம் தேதி தீர்ப்பு வெளியானது. ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், பயன்கள், சேவைகள் ஆகியவற்றை உண்மையான பயனாளிகளைக் கண்டறிந்து வழங்குதல்) சட்டம் 2016 என்ற சட்டம் அரசியல் சாசனத்தின்படி சரியா என்ற வழக்கில் 5 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்ச் வழங்கிய தீர்ப்பில் அரசியல் சாசனத்தின்படி இச்சட்டம் சரியே என நான்கு நீதிபதிகளும், அரசியல் சாசன சட்டங்களுக்கு உட்பட்டிருக்கிறதா என்ற கேள்வியை நீதியரசர் டி ஒய் சந்த்ரசூட் அவர்கள் எழுப்பியும் பிளவுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளனர். இத்தீர்ப்பின்படி அரசின் நலத்திட்டங்களைப் பெறுவதற்கும் வருமான வரிக் கணக்கை சமர்ப்பிப்பதற்கும் இனி ஆதார் கட்டாயமாகிறது. அதேபோல் பான் கார்டை ஆதாருடன் இணைப்பதும் கட்டாயமாகிறது. ஆயினும், வங்கிக் கணக்கு துவக்குவதற்கும், அலைபேசிகளுக்கான சிம் கார்ட் வாங்குவதற்கும், தனியார் கம்பெனிகளின் சேவைகளைப் பெறுவதற்கும் பள்ளிகளில் சேர்வதற்கும் நீட், யுஜிசி, சிபிஎஸ்இ போன்ற அமைப்புகள் நடத்தும் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கும் ஆதார் கட்டாயமில்லை. இத்தீர்ப்பை ஊடகங்களின் ஒரு பகுதியினர் வானளாவ புகழ்ந்தனர். ஆதார் பற்றிய கேள்வி எழுப்பியவர்களின் வாயை அடைத்துவிட்டு அதே சமயம் ‘அரசாட்சி பற்றிய நவீன கண்ணோட்டத்தை உயர்த்திப்பிடிப்பதாகவும்’ புகழ்பாடினர்.

இத்தீர்ப்பு இன்று பாடுபடும் மக்கள் வாழ்வில் ஏதேனும் நன்மாற்றத்தை ஏற்படுத்துமா என்று பார்ப்பதற்கு முன்னதாக, ஆதார் பற்றிய வரலாற்றை சுருக்கமாகக் காண்போம்.

### ஆதாரின் வரலாறு – சுருக்கமாக

முந்தைய காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ அரசாங்கத்தில் அப்போதைய திட்டக் கமிஷனால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் ஆதார் ஆகும். அரசின் நலத்திட்டங்களின் பலன்களை உரிய பயனாளிகளுக்கு நேரடியாக எடுத்துச் செல்வதற்காக என்று சொல்லிக்கொண்டு ஆதார் திட்டம் கொண்டு வரப்பட்டது. தகவல் தொழில்நுட்ப நிபுணரும் அத்துறையின் தொழிலதிபரும் காங்கிரஸ் உறுப்பினருமான திரு நந்தன் நீல்கேணியிடம் இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. யுனிக் ஐடென்டிடி அதாரிட்டி ஆஃப் இந்தியா என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் முதல் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். ஆதார் திட்டத்தை அமல்படுத்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்ட அன்றைய அரசாங்கம் இந்திய தேசிய அடையாள அதிகார ஆணையம் (NIDAI) 2010 என்ற மசோதாவை டிசம்பர் 2010ல் தாக்கல் செய்தது. ஆனால், ‘குழப்பங்கள் நிறைந்த’தாகவும், ‘நோக்கத்தில் தெளிவின்றி’யும் ‘திசைவழி இன்றி’யும் இருப்பதாக பாராளுமன்ற நிலைக்குழு தெரிவித்தது. ஆகையால் இத்திட்டம் தொடர்வதென்பது “அறத்திற்கு அப்பாற்பட்டதும் பாராளுமன்றத்தின் தனிச்சிறப்புரிமையை மீறுகின்ற செயல்” என்றும் அவர்கள் கருத்து தெரிவித்தனர். இது சம்பந்தமான பல்வேறு விஷயங்களின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் போராட்டங்களும் விமரிசனங்களும் அப்போது வெடித்தன.

இவ்வாறாகத்தான், சட்டமியற்றும் அதிகாரம் படைத்த பாராளுமன்றத்தை அதன் வரம்பிற்குட்பட்ட விவகாரத்தில் சற்றும் மதிக்காமல் அரசியல் சாசனத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பான வகையில் ஆதார் திட்டம் நாட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டது. நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருந்தபோதும் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் விமரிசனங்களும் எதிர்ப்புகளும் இருந்தபோதினும் இத்தனை ஆண்டுகள் இத்திட்டத்தை ஆளுங்கட்சிகள் அமல்படுத்தியே வந்தன. தங்களது எஜமானனின் கட்டளைகளை இக்கட்சிகள் மீற முடியாது. ஆகையால்தான், இத்திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக காங்கிரஸ் மீது கடுமையான விமரிசனங்களை வைத்த பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர், இம்மசோதாவில் மேம்போக்காக சில மாற்றங்களை செய்துவிட்டு, (உதாரணமாக செலவினங்களிலும் அரசாங்கத்தின் நிர்வாக முடிவுகளிலும் வெளிப்படைத்தன்மையை கொண்டுவந்தது) பாஜக 2016ம் ஆண்டில் ஆதார் சட்டத்தை நிறைவேற்றியது. தனக்கு பெரும்பான்மை இருந்த லோக்சபாவில் இம்மசோதாவை பண மசோதா (money bill) என்ற போர்வையில் நிறைவேற்றிவிட்டு தனக்கு பெரும்பான்மை பலமில்லாத ராஜ்ய சபாவிற்கு இம்மசோதாவை எடுத்துச்செல்லாமலேயே சட்டத்திற்கு புறம்பாக நிறைவேற்றியது. இதைத்தான் சட்டத்திற்கும் அரசியல் சாசனத்திற்கும் புறம்பாக இந்த ஆதார் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் அதனால் இச்சட்டம் செல்லுபடியாகாது என்றும் நீதியரசர் சந்திரசூட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

2012ம் ஆண்டிலிருந்து இச்சட்டத்திற்கு எதிராக ஒன்றன்பின் ஒன்றாக பல்வேறு வழக்குகள் போடப்பட்டன. இச்சட்டம் 2016ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிறகு மேலும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அரசியல் சாசனப்படி இச்சட்டம் செல்லுபடியாகாது என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டவையே இவ்வழக்குகள் ஆகும். நாட்டின் எதிர்காலம் குறித்து அச்சாணி என குறிப்பிடப்படும் இச்சட்டத்தின் மீதான வழக்குகள் விரைந்து விசாரித்து முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தாமதமாக வழங்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம் என்ற கோட்பாட்டிற்கேற்ப இவ்வழக்கும் 2012ம் ஆண்டு முதல் இழுத்தடிக்கப்பட்டது. இதற்கிடையே அரசாங்கங்களின் நலத்திட்டங்களைப் பெறுவதற்கு ஆதாரை கட்டாயமாக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பல இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பித்து வந்தது. ஆனால், அரசாங்கங்கள் இவற்றை சற்றும் கண்டுகொள்ளவில்லை. மாறாக, ஆதாரைக் கட்டாயமாக்கும் முயற்சி விசாலமாக்கப்பட்டுக்கொண்டே வந்தது. இதற்காக நீதிமன்றம் அரசாங்கத்தை கண்டிக்கவே இல்லை. இறுதியில் இவ்வழக்கில் விசாரணையை இவ்வாண்டு மே மாதத்தில் முடித்த நீதிமன்றம் தீர்ப்பை ஒத்திவைத்தது. இறுதியாக கடந்த செப்டம்பர் 26ம் தேதியன்று மேற்குறிப்பிட்டபடி பிளவுபட்ட தீர்ப்பை வழங்கியது. அதே சமயம், ஆதாரை கட்டாயமாக்கி இச்சட்டத்தை அமல்படுத்திய விதத்திற்காக அரசாங்கத்தையும் அதிகாரிகளையும் நீதிமன்றம் இத்தீர்ப்பில் பாராட்டியுள்ளது. அதாவது, தனது இடைக்கால உத்தரவுகளை துச்சமென மதித்து ஆதாரை கட்டாயப்படுத்தியதற்காக அரசாங்கத்தை நீதிமன்றம் பாராட்டுகிறதென்றால், அது முன்னர் வழங்கிய இடைக்கால உத்தரவுகள் அனைத்தும் வெறும் கண்துடைப்புதான் என்றுதானே பொருள்? ஆதார் சட்டத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரல்களை மட்டுப்படுத்துவதற்காக கையாண்ட நயவஞ்சக உத்திதான் இந்த செயல்படுத்தப்படாத இடைக்கால உத்தரவுகளாகும்.

### ஆதார் திட்டத்திற்கு முட்டுக்கொடுக்கும் கார்ப்பொரேட் பிரதிநிதிகள்

அரசின் நலத்திட்ட உதவிகளின் பலன்கள் இடையில் சிதறிவிடாமல், மக்களுக்கு நேரடியாக சென்றடைவதற்கு வழிவகை செய்யும் என்ற காரணம் கூறி ஆதார் திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஆனால், அரசாங்கம் அளிக்கும் நலத்திட்ட உதவிகள் மக்களுக்கு முழுமையாக சென்றடையாததற்கு காரணம், தனித்தன்மை வாய்ந்த 12 இலக்க அடையாள எண் இல்லாததாலா அல்லது சமூகத்தில், குறிப்பாக அரசு நிர்வாகத்தில் ஊழல் மலிந்து போயிருப்பதாலா என்ற கேள்வி அப்போதே எழுப்பப்பட்டது. ஊழலின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் முதலாளித்துவ அமைப்பு முறையில் தனித்துவ அடையாளம் ஊழலை ஒழிக்க முடியவே முடியாது. இதை நாமும் இத்திட்டம் பற்றி விமரிசனங்கள் வைப்போரும் மட்டும் சொல்லவில்லை. இத்திட்டத்தை வகுத்து செயல்படுத்துவதற்காக UIDAI அமைப்பின் தலைவராக முதலில் நியமிக்கப்பட்ட திரு நந்தன் நீல்கேணியிடம் இக்கேள்வி முன்வைக்கப்பட்டபோது இக்கவலையில் நியாயம் இருப்பதாகத் தெரிவித்ததோடு இதுபற்றி பொது வெளியிலும் சட்ட ரீதியாகவும் தீர்வு காண வேண்டியது அவசியம் என்றும் அப்போதே கூறினார். ஆக, ஊழலை ஒழிக்குமா என்பதிலும் மக்களுக்கு முழுமையாக பலன்கள் சென்றடையுமா என்பதிலும் இத்திட்டத்தை அமல்படுத்தியவர்களுக்குக்கூட அப்போதே ஐயப்பாடுகள் இருந்துள்ளன என்பது தெளிவாகிறது.

நீல்கேணி அவ்வாறு கூறி பத்தாண்டுகள் ஆன பிறகு மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் நிறுவனரான பில் கேட்ஸ், 10.08.2018 அன்று நியூஸ் 18 தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில், ஆதார் திட்டம் தனிநபர் அந்தரங்கத்திற்குள் ஊடுருவி அந்தரங்கத்திற்கான உரிமையை பறிக்கிறது என்ற குற்றச்சாட்டை மறுத்தார். இந்திய சூழ்நிலையைப் பற்றி போதுமான அறிவு இன்றி, இந்தியாவின் யதார்த்த பிரச்சினைகள் பற்றிய தெளிவு ஏதுமின்றி, அந்தரங்கம் தொடர்பான பிரச்சினைகளை வெறுமனே ஆதார் திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள நடைமுறைக் கோளாறுகளேயன்றி வேறல்ல என்று அவர் சர்வ சாதாரணமாக ஒதுக்குவது இத்திட்டம் யார் நலனுக்காக என்ற கேள்வியை மக்கள் மனதில் வலுவாக எழுப்புகிறது.

### அந்தரங்கம் : வாழ்வு மற்றும் தனிப்பட்ட உரிமையின் பிரிக்கவியலாத அங்கம் – அரசியல் சாசனமும் உச்சநீதிமன்றமும் உத்தரவாதமளிக்கிறது

ஏற்கனவே பல நுகர்வோரின் கைபேசி எண்களும் வங்கிக் கணக்குகள், பான் கார்டுகள், குடும்ப அட்டைகள், சமையல் எரிவாயு இணைப்புகள் போன்றவை ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஆதாரில் சேமிக்கப்பட்டுள்ள பயோமெட்ரிக் எனப்படும் உயிரி தகவல் தரவுகளோடு இதுபோன்ற பௌதிக மற்றும் நிதித்தரவுகளும் இதர தரவுகளும் ஆதார் கோப்பில் சேமிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் களவாடப்படாமல் பத்திரமாகப் பாதுகாத்து வைப்பதற்கு யாராலும் தொடமுடியாத உறுதியான தரவு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கி செவ்வனே செயல்படுத்தவேண்டியது அவசியமாகிறது. இத்தகைய தொரு பாதுகாப்பு அமைப்பு நடைமுறைபடுத்தப்படுவதாகவும் அனைத்து தரவுகளும் சந்தேகத்திற்கிடமின்றி பாதுகாப்பாக உள்ளதாகவும் அரசாங்கம் திரும்பத்திரும்ப கூறிவந்தது. தனிநபர் தரவுகளும் அந்தரங்கத் தகவல்களும் தனியார் நிறுவனங்கள் மூலம் மட்டுமின்றி அரசுத்துறைகள் மூலமாகவும் கசிந்து வெளிவந்துள்ளன என்பது பொதுவெளியில் பலமுறை வெளிவந்தன. எனவே, பாதுகாப்பு அம்சம் பற்றிய வாதத்திற்கு பதிலளிக்கும் வகையில் தகவல்களையும் தரவுகளையும் பாதுகாப்பதற்குத் தேவையான தரவுகள் பாதுகாப்புச் சட்டம் செம்மையாக இல்லை என்றும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இதற்கான பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் இவ்வழக்கின் தீர்ப்பில் நீதிபதிகளே ஒப்புக்கொண்டு குறிப்பிட்டுள்ளனர் என்பதை இங்கே கவனிக்கவேண்டும்.

எனவே, ஆதார் தரவுகள் களவாடப்படுவதால் தனிநபரின் அந்தரங்கம் அபாயத்திற்குள்ளாகி இருக்கிறது என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. எவ்வித விதிகளுக்கும் கட்டுப்படாமல், சட்டத்திற்குப் புறம்பாக தனிநபரின் சொந்த விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது என்ற உரிமையை அரசியல் சாசனம் உத்தரவாதப் படுத்தியிருக்கிறது. இந்திய அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவு 21ன் கீழ் தனிநபர் அந்தரங்கம் பற்றிய உரிமை பாதுகாக்கப்பட்டிருப்பதாக உச்சநீதிமன்றமும் கூறியிருக்கிறது. (ராஜகோபால் vs தமிழ்நாடு அரசாங்கம் 1994 மற்றும் PUCL vs இந்திய ஒன்றியம் 1996 ஆகிய வழக்குகளில்) கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட ஆணையொன்றில் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தரங்கத்திற்கான உரிமை அடிப்படை உரிமை என்றும் அரசியல் சாசன சட்டப்பிரிவு 21ன்படி “வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தின் பிரிக்கமுடியாத பகுதி” என உத்தரவாதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வாணையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தின் கருத்துகள் இவ்வாறிருக்க, அவர்கள் பிறப்பித்த இடைக்கால உத்தரவுகளை மீறி தனியார் நிறுவனங்களும் அரசுத் துறைகளும் சேகரித்த ஆதார் தரவுகளின் கதி? அவை அந்தந்த கோப்புகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்படவில்லை. அதைப்பற்றி நீதிமன்றம் எதுவும் சொல்லவில்லை. இவ்வாறு சேகரித்த ஆதார் தரவுகள் தான் களவாடப்பட்டிருக்கின்றன அல்லது பிற நிறுவனங்கள் அல்லது ஏஜென்சிகளுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஏற்கனவே நடந்த தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை இல்லாததால், அவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து சாமானிய மனிதன் மீட்கப்படப் போவதில்லை. அது மட்டுமல்ல. வங்கிக்கணக்குகளுடன் ஆதாரை இணைப்பதற்கான உச்சநீதிமன்றத்தின் உத்தரவை செல்லாததாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டமியற்றுவது பற்றி ஆலோசித்து வருவதாக நிதியமைச்சர் ஏற்கனவே கருத்து தெரிவித்துள்ளார். ஆனால், உயிரியல் அளவீடுகள் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட தரவுகள் தனியார் ஏஜென்சிக்கள் கையாள்வதற்கு அனுமதிப்பதானது அபாயகரமான பின்விளைவுகளை

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஆதார் திட்டம்

## முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டது–இப்போதைய பாஜக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது

3ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்தும் என்று நீதிபதி சந்திரசூட் தனது தீர்ப்பில் கருத்து தெரிவித்துள்ளார். இதனால், தனிநபரின் விருப்பு வெறுப்புள், அரசியல் தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் அடங்கிய தனிநபர் குறிப்புகள் (Profiles) தயாரிக்கப்பட்டு வணிக நோக்கங்களுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் என்று நீதிமன்றம் கருதியதால் ஆதார் சட்டத்தின் பிரிவு 57ஐ உச்சநீதிமன்றம் நீக்கிவிட்டது. இச்சட்டப்பிரிவானது ஆதார் தரவுகளை தனியார் துறைகள் பயன்படுத்திக்கொள்வதற்கான அனுமதி அளிக்கும் பிரிவாகும். ஆனால், சமீப காலங்களில் வெளியாகியுள்ள தகவல்கள், ஊடகச் செய்திகளிலிருந்து தனியார் துறைகள் மட்டுமின்றி அரசுத் துறைகள்கூட இத்தரவுகளை துஷ்பிரயோகம் செய்வது அம்பலமாகிவருகின்றன. 'நகர்ப்புற நக்சல்கள்' என்ற தவறானதொரு சொல்லை பயன்படுத்தி அரசாங்கத்தை விமரிசிக்கின்றவர்களையும் சமூக செயல்பாட்டாளர்களையும் அரசாங்கம் சமீபத்தில் கைது செய்த விதம், உத்தரப் பிரதேசத்தின் யோகி அரசாங்கம் என்கவுண்டர் என்ற பெயரில் கண்ணில் படுவோரையெல்லாம் சுட்டுத்தள்ளுவது, சமீபத்தில் ஒரு வர்த்தகப் பெரும்புள்ளியை நடு ரோட்டில் பட்டப்பகலில் சுட்டு வீழ்த்தியது, போன்றவை தனிநபர் தரவுகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமைக்கான சமீபத்திய ஒருசில உதாரணங்களாகும். சிபிஐ, சிஐடி, போலீஸ், உளவுத்துறை என பல்வேறு அரசுத்துறை ஏஜென்சிக்கள் இவற்றை ஏற்கனவே துஷ்பிரயோகம் செய்துள்ளன.

கடந்த 2017ம் ஆண்டு நவம்பரின் அரசுத்துறை மற்றும் கல்வி நிலையங்கள் என பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 210 வலைத் தளங்கள் தனிநபர்களின் தனிப்பட்ட தகவல்களை அவர்களது தனித்துவ அடையாள எண்ணுடன் பகிரங்கமாக வெளியிட்டன. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) இக்கசிவை ஒப்புக்கொண்டது. ஆனாலும், அக்கசிவைச் செய்தது தாங்களல்ல என்றும் தங்களது தரவுத்தளம் பாதுகாப்பாக உள்ளது என்றும் சொல்லிக்கொண்டது. இவ்வாறு தரவுகளை கசியச் செய்பவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மிரட்டியது. ஏர்டெல் இந்தியா நிறுவனம் ஆரம்பித்த தொகை செலுத்துவதற்கான வங்கி (பேமென்ட் பேங்க்)யில் தனது வாடிக்கையாளர்களுக்கு கணக்குத் துவக்கிவிட்டது. சிம் கார்டு வாங்கும்போது வாடிக்கையாளர்களுக்கு சரிவர உண்மையை விளக்காமல், அவர்களிடம் கையொப்பம் பெற்று இக்கணக்குகளைத் துவக்கி, வாடிக்கையாளர்களின் மானியங்கள் இக்கணக்கில் வரவு வைக்கப்படுமாறு செய்துவிட்டது. இதில் பல்வேறு நிதி மோசடியிலும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. தங்களது வங்கிச் சேமிப்புக்கணக்கில் தங்களுக்கான மானியத் தொகை வந்து சேரவில்லையே (சமையல் எரிவாயு போன்றவற்றுக்கான மானியம்) என்று வாடிக்கையாளர்கள் படையெடுக்கும்போதுதான் ஏர்டெல் செய்த இந்த மோசடி அம்பலமானது. கடந்த 11.09.2018 அன்று ஹஃப்பிங்டன்போஸ்ட் என்ற ஊடக இதழ் தாங்கள் மூன்று மாதகாலமாக ஆதார் தரவுத்தளத்தை ஆய்வு செய்ததாகவும், அதிலிருந்து இத்தரவுத்தளம் சட்டத்திற்குப் புறம்பாக ஊடுருவப்பட்டுள்ளது தெரியவந்ததாகவும் தெரிவித்துள்ளது. இவ்வாறு ஊடுருவி தரவுகள் எதுவும் களவாடப்படவில்லை என்றும் அதற்கு மாறாக, டெமோகிராஃபிக் தகவல்கள் மற்றும் பயோமெட்ரிக் தகவல்களை வழங்காமலேயே புதிதாக ஆதார் அடையாளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இவை மிகவும் பலம்வாய்ந்த நபர்களால் அல்லது ஏஜென்சிக்களால் மட்டுமே இதைச் செய்ய இயலும் என்றும் இத்தகைய போலியான அடையாளங்களைப் பயன்படுத்தி இமாலய நிதி மோசடிகள் மட்டுமின்றி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உபயோகித்தல் அரசியல் ஆதாயங்கள் போன்றவற்றுக்காக இந்த அடையாளங்களை துஷ்பிரயோகம் செய்யலாம் என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இச்செய்தியில் உண்மை இல்லை என வழக்கம்போல மறுப்புத் தெரிவித்த இந்திய தனித்துவ அடையாள ஆணையம், இருப்பினும் தங்கள் வலைத்தளத்தின் பாதுகாப்பை மேலும் கெட்டிப்படுத்துவதாக தெரிவித்தது. இதிலிருந்து இத்தகைய பாதுகாப்பு வலையில் பிளவு ஏற்படுத்தி ஊடுருவப்பட்டது உண்மை என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டது என்றே கூறவேண்டும். (ஆதாரம்: https://www.huffingtonpost.in/2018/09/11/uidai-s-aadhaar-software-hacked-id-database-compromised-experts-confirm_a_23522472/ https://timesofindia. indiatimes.com/india/uidai-dismisses-reports-on-aadhaar-software-hacking/articleshow/65773171.cms)

அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக, நியாயமும் நீதியுமற்ற முறையில் களவாணித்தனமாக ஆதார் சட்டத்தை அரசாங்கம் இயற்றி அமல்படுத்துகையில் தனியார் நிறுவனங்கள் இதைக்காட்டிலும் மோசமாக சட்டத்தையும் நியாயத்தையும் மீறுகின்றன.

### இந்திய சூழ்நிலையின் யதார்த்தத் தன்மை

இந்தியாவைப் போன்றதொரு நாட்டில் ஆதார் போன்ற திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதற்கு நிறைய நிபந்தனைகளை தாண்டிச் செல்வது மிகச்சவாலான ஒன்றாகும். அதாவது, என்ரோல்மென்ட் நிபந்தனைகளை ஒருவரால் பூர்த்தி செய்ய முடியுமானால், ஒருவரது என்ரோல்மென்ட் மையத்தில் முறையான மின் இணைப்பு இருக்குமானால், அவரது கருவிழிகளையும் கை ரேகைகளையும் ஸ்கேன் செய்து கைப்பற்ற முடியுமானால், முகவரியில் எவ்வித சிறு மாறுதலும் இல்லாதிருக்குமானால், பெயரை சரியாக பதிவு செய்வதில் எவ்வித சிக்கலும் இல்லாதிருக்குமானால், எவ்வித எழுத்துப் பிழையும் இன்றி என்ரோல்மென்ட் மைய பணியாளர் ஒருவரது தரவுகளை பதிவேற்றினாரேயானால், குறிப்பாக படிப்பறிவற்ற ஒருவரது தரவுகளை பிழையின்றி பதிவேற்றப்படுமானால் என எத்தனையெத்தனையோ "ஆனால்"களை கடக்க முடிந்தால் மட்டுமே ஆதாரில் இணைத்துக்கொள்ள முடியும். அதன் பிறகு, ஆதார் தரவுத்தளத்திற்கு இத்தரவுகளை அனுப்புவதிலும் இவற்றையெல்லாம் சரிவர சேகரித்து அதன் மென்பொருள் அவற்றை ஏற்றுக்கொள்ளுமானால் மட்டுமே தனித்துவ அடையாளம் உருவாக்கப்படும். அதில் ஏதாவது கோளாறு ஏற்படுமானால், மேற்சொன்ன அத்தனை "ஆனால்"களையும் மீண்டும் ஒருமுறை அந்நபர் கடந்தாகவேண்டும். அதாவது, மீண்டும் என்ரோல் செய்துகொள்ள வேண்டும்.

என்ரோல்மென்ட், அதாவது பதிவு மையத்திலிருந்து சில கிலோமீட்டர்கள் தொலைவில், ஒரு குக்கிராமத்தில் வாழ்கின்ற ஒரு தினக்கூலித் தொழிலாளி தனது வேலையையும் கூலியையும் விட்டுவிட்டு எத்தனை முறை கைக்காசை செலவு செய்துகொண்டு என்ரோல்மென்ட் மையத்திற்கு சென்றுவர இயலும்? அல்லது வயோதிகத்தாலும் நோயாலும் பீடிக்கப்பட்டோரால் எத்தனை முறை செல்ல இயலும்? அதிலும், போக்குவரத்து வசதிகளும் சாலை வசதிகளும் சரிவர இல்லாத கிராமங்களிலும் மலைப்பகுதிகளிலும் இருப்போர் எத்தகைய இன்னல்களையும் சிரமங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கும்? "ஒருவர் பெயரை மற்றவர் பயன்படுத்தி அரசாங்கத்தின் சம்பளப்பட்டியலில் ஆள்மாறாட்டம் செய்வததைத் தடுக்கும்" என்று ஆதாருக்கு ஆதரவாக பில் கேட்ஸ் பேசுகிறார். ஆனால், பிழைப்புக்காக வெகுதூரம் பிள்ளைகள் சென்றுவிட குக்கிராமத்தில் வாழ்ந்துகொண்டு கிலோமீட்டர் கணக்கில் நடந்து சென்று நியாய விலைக்கடையில் அரிசியோ மற்ற உணவுப் பொருட்களோ வாங்குகின்ற ஒரு மூதாட்டியின் கைவிரல் ரேகையோ அல்லது கருவிழியோ ஆதார் தரவுகளுடன் ஒத்துப்போகவில்லை என்று அக்கடையின் பணியாளர் கூறிவிடுவாராயின் அவர் தனது அடையாளத்தை நிரூபிப்பதற்கான வழியேது? போலி ஆவணம் காட்டி அரசின் சலுகைகளை பெற முயல்கிறார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டுவதும் பலன்களை மறுப்பதும் நியாயமாகுமா? அல்லது நாட்டின் ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கு பிழைப்புத் தேடி செல்கின்ற ஒரு கூலித்தொழிலாளியின் பயோமெட்ரிக் அடையாளங்கள் ஒத்துப்போகவில்லை என்பதற்காக அவருக்கு வேலை மறுக்கப்படுமானால் அவர் வாழ்வதற்கு வழியேதும் உள்ளதா? நிர்க்கதியாக நிற்கின்ற அவரை போலி ஆவணம் காட்டி நாட்டிற்குள் ஊடுருவ முயலும் தீவிரவாதியைப் போல சித்தரிப்பது சரியாகுமா? 60 வயதைக் கடந்தோருக்கும் 12 வயதிற்கு உட்பட்டோருக்கும் கடுமையான உடலுழைப்பில் ஈடுபடுவோருக்கும் தேய்மானம், வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக விரல் ரேகைகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. ஆகையால், நியாய விலைக்கடை பணியாளரும் வேலை கொடுப்பவரும் நாணயமானவராக இருந்தால்கூட இவர்கள் உணவுப் பொருளோ வேலையோ பெறமுடியாமற்போகும்.

பயனாளிகளை சரியாகக் கண்டறிந்து அவர்களுக்கான அரசின் உதவிகளை கொஞ்சம்கூட சிந்தாமல் சிதறாமல் முழுமையாக கொண்டு சேர்ப்பதற்காகத்தான் தனித்துவ அடையாளமும் நேரடி பணப்பரிமாற்றமும் கொண்டுவரப்படுவதாக அரசாங்கம் திரும்பத்திரும்ப கூறிவருகிறது. அதாவது மக்களுக்காக அரசாங்கம் வழங்கும் மானியங்களை இடையில் யாரோ அள்ளிச்சென்றுவிடுவதால் மக்கள் உண்மையிலேயே பயனடையாமற்போகிறார்கள். இதைத் தடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். ஆனால், 12 இலக்க எண் கொண்டதொரு தனித்துவ அடையாளம் இல்லாமற்போனதால்தான் தங்களுக்கான உரிய பலன்களை மக்களால் பெற முடியாமல் போனதா அல்லது இவ்வமைப்பு முறையில் ஊழல் புரையோடிப்போயிருப்பதாலா என்பதே மக்கள் மனதில் எழுகின்ற முதல் கேள்வியாகும். வறுமையில் உழலுகின்ற அடித்தட்டு மக்கள், தலித்துகளின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகையும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் உரிய பயனாளிகளுக்கு வேலை செய்த வேலைக்கு உரிய கூலி கிடைக்கமாற்போவதும்கூட இடைத்தரகர்கள், ஊழல்வாதிகளாகத் திகழும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரேயாகும். பயனாளிகளுக்கு தனித்துவ அடையாளம் கொடுப்பதால் உடனே இந்த ஊழல்வாதிகள் திருந்தி மாறிவிடுவர் என்று நம்புவது கற்பனை உலகில் சஞ்சரிப்பதாகும். மாறாக, புதிய சிஸ்டத்தில் எவ்வாறு ஊழல் செய்து பெரும்பொருளீட்டுவது என்று கண்டறிந்துவிடுகின்றனர். மக்களின் படிப்பறிவின்மை, அறியாமை, புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தும்போது விவரமறிந்தவர்களை சார்ந்திருக்கவேண்டிய நிலைமை, எல்லாவற்றிற்கும் மேலாக வறுமை ஆகியவற்றை தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ளுகின்ற ஊழல்வாதிகள், அரைவயிற்றுக் கஞ்சிக்காக கூலிவேலைக்கும், சில சில்லறைத்தொகை மானியங்களுக்காகவும் அரசாங்கத்தை எதிர்பார்த்துக்கிடக்கின்ற மக்களை அரட்டியும் மிரட்டியும் (கைவிரல் ரேகை ஒத்துப்போகவில்லை, இயந்திரம் பழுதாகிவிட்டது, மின் இணைப்பு இல்லை போன்ற காரணங்களுக்காக) அவர்களை அலைக்கழிப்பதால் கிடைத்தது போதும் என்று தங்களுக்கு நியாயமாக சேரவேண்டிய பலன்களில் பாதியையாவது பெற்றுச் செல்லலாம் என்ற மனநிலைக்குத் தள்ளப்பட்டு ஊழல்வாதிகள் விதிக்கும் கட்டளைகளுக்கு அடிபணிந்துவிடுகின்றனர். தனித்துவ அடையாளம் வழங்கப்பட்டபின் ஒரு சாமானிய இந்தியன் ஒரு சில நூறு ரூபாய் மானியத்தொகைக்காக "நான்தான் நான்" என்று நிரூபிப்பதற்கே பெரும்பாடு ஆகிவிட்டது. அதே சமயம், பல்லாயிரம் கோடி ரூபாய்களை மோசடியாக வங்கிக்கடன் பெற்று அதைத் திருப்பிச்செலுத்தாமல் நாட்டை விட்டே ஓடிப்போய் பிற நாடுகளில் தஞ்சம் அடைந்து இந்திய அரசாங்கத்திற்கு கட்டளைகள் இட்டுக்கொண்டிருப்பதும் இதே இந்தியாவில்தான் நடக்கிறது என்பதையும் இங்கே மனதிற்கொள்ளவேண்டும். இவர்களுக்கு வழங்கப்பட்ட தனித்துவ அடையாளம் மோசடி செய்வதிலிருந்து இவர்களைத் தடுக்கவில்லை. ஆக, ஊழலை ஒழிப்பதற்காக என்று இத்திட்டம் கொண்டுவரப்படுவதாக சொல்வதில் எவ்வித முகாந்திரமும் இல்லை.

அடையாளத்தை நிரூபிப்பதற்காக மக்கள் அலைக்கழிக்கப்படுவது வறுமையில் வாழும் அடித்தட்டு மக்களை மட்டும் அல்ல. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுகின்ற அரசாங்க ஊழியர்களும்கூட அவதிக்குள்ளாகிறார்கள். தனது ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு மாதமும் கைவிரல் ரேகைகளை பயோமெட்ரிக் சரிபார்த்தலுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. ஆதார் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளில் ஒருவரான நீதியரசர் டி ஒய் சந்திரசூட் அவர்களின் (இவரது தகப்பனார் மறைந்த திரு

தொடர்ச்சி 5ம் பக்கம்

## ஆதார் திட்டம்

# மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் இத்திட்டம் வாழ்க்கைப்பிரச்சினை எதையும் தீர்க்கப்போவதில்லை

4ம் பக்கத் தொடர்ச்சி

ஒய் வி சந்திரசூட் அவர்களும் முன்னாள் தலைமை நீதிபதியாவார்) தாயாரும் (இவர் ஒரு அல்சீமர்ஸ் நோயாளி ஆவார்) தனக்கு வரவேண்டிய குடும்ப ஓய்வூதியத்திற்காக தனது கைவிரல் ரேகைகளை பதிவு செய்யவேண்டியுள்ளது. இதற்காக வங்கி மேலாளர் அவரது வீட்டிற்கே வருகை புரிந்து அவரது கைவிரல் ரேகை அடையாளங்களை பெற்றுச்செல்கிறார். மறைந்த தலைமை நீதிபதியின் மனைவியாகவும் தற்போதைய தலைமை நீதிபதியின் தாயாராகவும் இருப்பதால் அதிகாரிகள் வீட்டிற்கே வந்து அடையாளங்களை பெற்றுச் செல்கின்றனர். சாமானிய குடிமகனின் விஷயத்தில் இவ்வாறு நடக்கும் என்று எதிர்பார்க்கவே முடியாது.

முன்னாள் தலைமை நீதிபதியின் மனைவியாகவும் தற்போதைய தலைமை நீதிபதியின் தாயாகவும் இருப்பதால் அவரது வீட்டிற்கே அரசு இயந்திரம் வருகிறது. ஆனால், அறியாமையில் உள்ள, அரசு விதிமுறைகள் பற்றி அறியாத, படிப்பறிவற்ற வறிய மக்கள் லட்சக்கணக்கானோருக்கு இச்சலுகை கிடைக்குமா? நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தனித்துவ அடையாளம் பெறுவதற்காக கடக்க வேண்டிய டெக்னிகல் தடைகள் பல. ஆதார் வாங்குவதற்கு முகவரி அத்தியாவசியம் இல்லை என்றாலும் வங்கிச்சேவைகள் போன்ற பல விஷயங்களுக்கு முகவரி அவசியம். வயிற்றுப் பிழைப்புக்காக பல்லாயிரம் மைல்கள் கடந்து, பலப்பல இடங்களுக்கு புலம்பெயர்ந்து செல்லுகின்ற கூலித்தொழிலாளி எதை முகவரியாகத் தர முடியும்?

பிற மாநிலங்களுக்கு புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மட்டுமின்றி, அரசின் கவனத்திற்கும் கணக்கிலும் வராமல் வாழ்க்கை ஓட்டிக்கொண்டிருக்கின்ற நகர்ப்புற குடிசைப்பகுதி மக்கள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் போன்றோர் தங்கள் பிறப்பிற்கும் முகவரிக்கும் எதை ஆதாரமாகக் காட்ட முடியும்? அரசு இயந்திரத்தின் மூன்றாம் கண் எப்போது தங்கள் மீது விழுமோ எப்போது அவர்களை தங்களது வசிப்பிடங்களிலிருந்து அப்புறப்படுத்துவார்களோ என்ற இடையறாத மன உளைச்சலில் வாழ்வோராவர். தான் விரும்பும்போது இவர்களுக்கான பொறுப்பை அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும் துறக்கும். உண்மையில், இதே இந்தியத் திருநாட்டின் குடிமக்களாக இவர்கள் இருக்கின்றபோதினும் சில ஆதாரங்களைக் காண்பிக்க முடியாததாலும் யதார்த்தத்தில் தங்களுக்குரிய இடத்தில் இவர்கள் குடியின்றி அரசுக்கு சொந்தமான இடங்களில் குடியிருப்பதாலும் இவர்களது குடியுரிமையேகூட பறிக்கப்படும் என்ற அச்சத்திலேயே வாழுகின்ற இவர்கள் எவ்வாறு பல்வேறு தடைகளைக் கடந்த தனித்துவ அடையாளத்தைப் பெற முடியும்? ஆக, இதிலிருந்து நிரூபணமாவது யாதெனில், ‘அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்’கான திட்டம் என்று சொல்லிக்கொண்டு அமல்படுத்தப்படும் திட்டம் உண்மையில் பலரை உள்ளடக்காமல் வெளியேற்றுவதாக உள்ளது. ஆக, மக்கள் மத்தியில் பல்வேறு பிரிவினைகளும் சலுகைகள் பெறுவதில் பல்வேறு சமமின்மைகளும் ஏற்கனவே இருக்கின்ற சூழ்நிலையில் புதிதாக தனித்துவ அடையாளம், அதாவது ஆதார், கொண்டவர், ஆதார் இல்லாதவர் என்ற பிரிவினையையும் ஏற்படுத்துகிறது.

அரசாங்கம் மக்களுக்கு கொடுக்கும் பலன்கள் சிந்தாமல் சிதறாமல் பயனாளிகளுக்கு சரிவர சென்று சேர்ப்பதற்காக என்று சொல்லிக்கொண்டு பயனாளிகளின் வங்கிக்கணக்கில் அத்தொகை செலுத்தப்படுகிறது. தனித்துவ அடையாளம் பெற்றுவிட்டால்கூட அரசாங்கம் கொடுக்கும் சொற்பத் தொகையை (மானியங்கள் அல்லது முதியோர் ஓய்வூதியம் போன்றவை) பெறுவதற்கு வயோதிகக் காலத்தில்கூட 10–15 கிமீகள் கடந்து வங்கிக்கு செல்லவேண்டிய நிலையில் பல கிராமப்புறவாசிகள் உள்ளனர். இதற்காக ஆகும் போக்குவரத்து செலவும் அவர் மீது சுமத்தப்படுகிறது. இந்த சிரமத்தை குறைப்பதாகச் சொல்லிக்கொண்டு வங்கி முகவர்கள் (Banking Correspondents) என சிலரை அரசாங்கம் நியமித்தது. இவர்கள்தான் அறியாமையிலும் நிர்க்கதியாகவும் உள்ள மக்கள் அரசாங்கத்தின் பலன்களை பெறுவதைத் தடுக்கும் இடைத்தரகர்களாக விளங்குகின்றனர். ஏனெனில், பல கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர். ஊர்ப்பெரும்புள்ளி அல்லது அவரது உறவினர்கள் தான் வங்கி முகவர்களாக பதிவு செய்துகொண்டுள்ளனர். எனவே, நிர்க்கதியான ஏழை, படிப்பறிவற்ற பாமர மனிதன் ஏற்கனவே யார் தயவை நம்பி இருந்ததால் அவனுக்கு முழுமையான பலன்கள் கிடைக்காமல் போனதோ அதே நபர்கள்தான் தற்போதும் இடைத்தரகர்களாக விளங்குகின்றனர். கைவிரல் ரேகையை பதிவேற்றி ஆதன்டிகேட் செய்து பணம் தருவதற்கு பயனாளிகளுக்குத் தெரிந்தும் தெரியாமலும் பணத்தை சுருட்டிக்கொள்கின்றனர். பெரும்பாலும் ஒட்டுண்ணிகளாகத் திகழும் இந்த வங்கி முகவர்களைத் தாண்டி முழுமையான பலன்களைப் பெறுவதே அபூர்வமான விஷயமாகும்.

மேலும், ஒரு சிலர் தங்களை வங்கி முகவர்களாகப் பதிவு செய்துகொண்டு அப்பணியை வேறு யாருக்கேனும் சப்–கான்ட்ராக்ட் விடுவதோ அல்லது பினாமிகளாக செயல்படுவதோகூட நடக்கிறது. இவ்வாறு சப்–காண்ட்ராக்ட் விடுகின்ற நபரது விவரங்கள் அரசாங்கத்திடம் இல்லாததால் தரவுகள் களவு போவதும், அக்களவை தடுக்க இயலாமல் போவதும், களவாடியவர்களை கண்டுபிடிக்க முடியாமல் போவதும் நடக்கிறது.

இந்தியாவின் பருண்மையான யதார்த்த சூழ்நிலை இவையே. இதுபோன்றதொரு நாட்டில் ஆதார் போன்றதொரு திட்டத்தின் நோக்கங்களை அடைய முடியாது என்பதுதான் யதார்த்தம். இங்கே ஏட்டில் ஒன்று இருக்கும். யதார்த்தம் வேறாக இருக்கும். ஏட்டில் எழுதப்படுவதை யதார்த்தத்தில் நடைமுறை படுத்துவது இயலவே இயலாத காரியமாகும். நிலைமை இவ்வாறிருக்க, இதைப்பற்றியெல்லாம் கிஞ்சித்தும் அறிவற்ற பில் கேட்ஸ் ஏதோ நடைமுறைச் சிக்கல்கள் மட்டுமே இருப்பதாகவும் இவற்றை களைந்து இத்திட்டத்தை செயல்படுத்த இயலும் என்றும் கருத்து கூறுவது அறியாமை மட்டுமின்றி அகந்தையையும் காட்டுகிறது.

### ஆதாரும் தொழில்நுட்பமும்

சின்னத்திரையில் தோன்றி பேசும்போது, நவீன தொழில்நுட்பத்தின் வீறுநடையின் வெளிப்பாடு தான் ஆதார் என்று பிரதமர் நரேந்திரமோடி பெருமைப்படுகிறார். ஆதார் எதிர்ப்பாளர்களெல்லாம் ஏதோ கற்கால மனிதர்களைப்போல சித்தரிக்கிறார். தனது கூற்றுக்கு வலுச்சேர்ப்பதற்கு இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்களின் கருத்துகள் இருப்பதாக நந்தன் நீல்கேணி மற்றும் பில்கேட்ஸ் ஆகியோரை அவர் குறிப்பிடுகிறார். ஆனால், இவ்வழக்கில் மாறுபட்ட தீர்ப்பை வழங்கிய நீதியரசர் சந்திரசூட் அவர்கள், “எதிர்கால சுதந்திரத்திற்கே தொழில்நுட்பம் அச்சுறுத்தல் விடுக்கிறது” என்று தெரிவித்துள்ளார். டிஜிட்டல் இந்தியா என்ற பெயரில் மக்களுக்கிடையே டிஜிட்டல் பிளவு ஏற்படுத்தப்படுகிறது. இப்பிளவு ஏற்படுத்தப்படுவதை நாடு முதலில் அங்கீகரித்தாகவேண்டும். இங்கே படிப்பறிவின்மையும் ‘போலி படிப்பறிவும்’ பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி கோலோச்சுகின்றன. தவிர, டிஜிட்டல்மயமாக்கப்படாத இந்தியக் குடிமகனின் அடையாளத்தை டிஜிட்டல் இந்தியா ஒதுக்கிவிடக்கூடாது. ‘ஆதார் திட்டத்தின் வடிவமைப்பிலும் கட்டமைப்பிலும் காணப்படும் குறைபாடுகளுக்குப் பொறுப்பேற்று அவற்றைக் களைவதற்கு அத்திட்டம் தவறிவிட்டது’ என்று நீதியரசர் சந்திரசூட் கூறியுள்ளார். இதன் காரணமாக, ‘தகுதிவாய்ந்த பயனாளிகள் விடுபட்டுப்போகின்ற நிகழ்வுகள் பல நிகழ்வ’தாகவும் தெரிவித்துள்ள அவர், ‘தனிநபர்களின் கண்ணியமும் உரிமையும் நிகழ்தகவையும் (Probability) அல்காரிதம்களையும் சார்ந்திருப்பதற்கு விட்டுவிடக்கூடாது’ என்றும் கூறியுள்ளார். திரு சந்திரசூடின் இவ்வார்த்தைகளை பொய்யென்றோ பின்தங்கிய மனப்பான்மை என்றோ பிரதமர் ஒதுக்கமுடியுமா? வடிவமைப்பு அறத்தின் மூலம் சரியான முறையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் இல்லாமல், அல்லது சட்டப்படியான முறைமை வளப்படுத்தலும் இல்லாமற்போனால், தொழில்நுட்பத்தை ஒடுக்குமுறைக்கான கருவியாக பயன்படுத்தமுடியும் என்பதை டிஜிட்டல்மயமாக்கலோடும் டிஜிட்டல் உலகோடும் நன்கு பரிச்சயமான எவரும் ஒப்புக்கொள்வர். மிகச்சாதாரண வகையிலான தரவுகள் பாதுகாப்பு முறைமைகூட ஆதார் கொண்டிருக்கவில்லை. அதிநவீன பாதுகாப்பு அம்சங்களைப்பற்றி சொல்லத்தேவையில்லை.

### பயங்கரவாதத்தையும் நிதி முறைகேடுகளையும் தடுக்கும் என்ற பொய்மை

ஆதார் திட்டத்தின்படி ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவ எண் வழங்கப்படுகிறது. அவ்வாறு அடையாள எண் வழங்குவதற்காக அவரது பல தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பெயர், முகவரி, வயது, இனம், கல்வித்தகுதி,பாலினம், போன்ற தகவல்கள் இணைக்கப்படுகின்றன. முகம், கண்ணின் கருவிழி, கைவிரல் ரேகைகள் ஆகிய உடற்கூறு அடையாளங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த உடற்கூறு அடையாளங்கள் தனித்துவமானவை, அதாவது ஒருவரது கைவிரல் ரேகைகள் மற்றும் கருவிழிகள் போன்று மற்ற எவருக்கும் இருக்காது. எனவே, இந்த அடையாளங்கள் தனித்துவமானவையாதலால், இவற்றை வைத்து ஆதன்டிகேட் செய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்படுகையில் முறைகேடுகளில் யாராலும் ஈடுபடமுடியாது என்றும் நிதி முறைகேடுகள் தடுக்கப்படும் என்றும் இத்திட்டத்திற்கு வக்காலத்து வாங்குவோர் கூறுகின்றனர். ஏனெனில், யாரேனும் முறைகேடுகளில் ஈடுபட்டால் உயிருள்ள அந்நபரை உடனடியாக பிடித்துவிட முடியும் என்பது அவர்களது வாதமாகும். இதனால், நிதி முறைகேடுகளும் பயங்கரவாத நடவடிக்கைகளும் தடுக்கப்பட்டுவிடும் என்று மக்களை நம்பவைக்கின்றனர். ஆனால், முறைகேடுகளையும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளையும் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் ஏற்கனவே பல சட்டங்கள் உள்ளன. ‘நல்ல’ சட்டங்கள் மட்டுமின்றி கருப்பு சட்டங்களைக்கூட இயற்றி அரசாங்கம் தன்னை நல்ல ஆயுதபாணியாக வைத்துக்கொண்டுள்ளது. இவற்றை அமல்படுத்துவதற்கு போலீஸ், பல்வேறு புலனாய்வு அமைப்புகள், அமலாக்க இயக்ககம், பொருளாதார குற்றப்பிரிவு, உளவு அமைப்புகள், இராணுவ உளவுத்துறை, போன்ற ஏஜென்சிக்கள் உள்ளன. இவற்றையெல்லாம் சரிவர பயன்படுத்தி செயல்படுத்தினால் முறைகேட்டில் ஈடுபடுவோரையும் பயங்கரவாதிகள் என சொல்லப்படுவோரையும் எளிதில் கண்டுபிடித்திட முடியும். ஆனால், இவையெல்லாம் இருந்தபோதிலும் முறைகேடுகளும் பயங்கரவாத நடவடிக்கைகளும் தங்குதடையின்றி நடைபெறுகின்றன.

அது மட்டுமல்ல. சட்டத்திற்கு உட்பட்டோ அல்லது சட்டத்தை மீறியோ, ஆதார் திட்டமும் கடந்த 10 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எத்தனை நிதி முறைகேடுகளை அரசாங்கம் தடுத்துவிட்டது. இந்த பத்தாண்டு காலத்தில்தான் வங்கிக் கடன் மூலம் பல பத்தாயிரக்கணக்கான கோடி ரூபாய் மோசடி செய்து விஜய் மல்லையா, நீரவ் மோடி, முகுல் சோக்ஸ்கி போன்றோர் நாட்டை விட்டே தப்பிச்சென்றுவிட்டனர் என்பதை நாடே அறியும். அதுவும், தப்பிச்செல்வதற்கு முதல்நாள் பாராளுமன்ற வராந்தாவிலேயே நிதியமைச்சரை விஜய் மல்லையா சந்தித்துள்ளார் என்ற விவரமும் தற்போது வெளியாகிவிட்டது. அது மட்டுமல்ல, அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றங்களில் வாதிடுவோரும் ஆளுங்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் திகழும் வழக்கறிஞர்களேயாவர்.

எனவே, இந்த முதலாளித்துவ அமைப்பு முறைதான் குற்றங்களையும் குற்றவாளிகளையும் உருவாக்கி பாதுகாத்து பேணி வருகிறது என்பது இவற்றிலிருந்து மீண்டும் ஒருமுறை நிரூபணமாகிறது. இவர்களை கண்டுபிடித்து தடுப்பதற்கும் அரசாங்கம் உண்மையிலேயே நடவடிக்கை மேற்கொள்வதில்லை. குற்றங்களையும் முறைகேடுகளையும் தடுக்கவேண்டும் என்ற நேர்மையாக துணிகரமாக செயல்படாவிட்டால் சட்டங்களும் விதிகளும் இருந்துதான் என்ன பயன்? குற்றங்களை தடுக்க வேண்டும் என்ற மனம் இல்லாதபோது ஆதார் மட்டும் எவ்வாறு தடுத்துவிடப்போகிறது?

### இந்திய குடிமக்களுக்கு எதிரான திட்டமிட்ட மாபெரும் சதிதான் ஆதார்

ஆதார் என்ற தனித்துவ எண் பல்வேறு தரவுத் தளங்களில் ‘விதைக்கப்படு’வதன் காரணமாக தனியார், அரசுத்துறை என பல்வேறு நிறுவனங்களிடம் இந்த எண் இருக்கும். இந்த எண் அவர்களின் தரவுத்தளத்தில் விதைக்கப்படுவதால் தனிநபரின் விவரங்கள் அனைத்தும் அவர்கள் வசம்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## இந்திய உயர் கல்வி ஆணையம்

# ஜியோ நிறுவன விவகாரம் – கார்ப்பொரேட் நலனுக்கு அடிபணிந்துபோகும் ஓர் அவமானகர உதாரணம்

2ம் பக்கத் தொடர்ச்சி

முன்னேற்றத்தை காட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் கல்வி நிறுவனங்களில் அன்றாட நிர்வாகத்திலும் கல்வி விவகாரத்திலும் கூட ஹெச்இசிஐ தலையிடும் வாய்ப்பு உள்ளது. அரசாங்கம் தனது கொள்கைகளை உருட்டி மிரட்டி செயல்படுத்த வைப்பதற்கான கருவியாக வேண்டுமானால் இது பயன்படலாம்.

கல்வித் தரத்தை உண்மையிலேயே மேம்படுத்த அரசாங்கம் விரும்பினால் எவ்விதத் தலையீடுமில்லாத தன்னாட்சி அதிகாரத்தை அது உத்திரவாதப்படுத்த வேண்டும். அது எல்லா மட்டங்களிலும் ஊடுருவவேண்டும். வெளிஉலக நிர்ப்பந்தமில்லாமல் கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி இருக்க வேண்டும், கல்வி நிறுவனத்தின் தலைவரின் தலையீடு இல்லாத ஒப்பீட்டளவிலான சுதந்திரம் துறைகளுக்கு இருக்க வேண்டும். மாறாக, தரவாரி தன்னாட்சி வழங்குவதென்ற மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் சமீபத்திய நடவடிக்கை கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியை தடுப்பதற்காகவே திட்டமிடப்பட்டதாகும், இதனால் நிச்சயம் தரம் பலிகடாவாகிவிடும். சுருக்கமாக சொன்னால், இந்த அனைத்து நடவடிக்கைகளுக்குப் பின்னால், லாபவெறியோடு இயங்கும் முதலாளித்துவ சந்தையின் சர்வாதிகார வளையத்திற்குள் கல்வி நயவஞ்சகமாக வெளிப்படையாகவே தள்ளப்படுகிறது. எனவே ஏழை மாணவர்களுக்கு மட்டுமல்லாது நடுத்தர வர்க்க குடும்ப மாணவர்களுக்கும் கல்வி எட்டாக்கனியாகி வருகிறது, கல்வி மறுக்கப்படுகிறது. ஹெச்இசிஐ இதை துரிதப்படுத்துகிறது.

உண்மையைச் சொன்னால், உயர்கல்வி மீது திட்டமிட்டுத் தொடுக்கப்பட்டுவரும் தாக்குதல்களின் இறுதி தாக்குதல்தான் ஹெச்இசிஐ வடிவில் வருகிறது. தரத்தை மேம்படுத்துகிறோம் என்ற ஹெச்இசிஐஇன் வாக்குறுதியை புரிந்துகொள்ள யஸ்பால் கமிட்டி பரிந்துரைகளை நினைவுபடுத்திப் பார்ப்போம். கல்வி என்பது பிரத்யேகமான முதலீடு செய்வதற்கானது எனவே அதற்கான பொறுப்பிலிருந்து அரசாங்கம் வெளியேற வேண்டும் என்று கூறிய என்பிஇ '86இன் (புதிய தேசியக் கொள்கை 1986) முன்மொழிவுகளுக்கு ஏற்ப யஸ்பால் கமிட்டியும் உயர் கல்விக்களத்தை பெரியஅளவில் 'அறிவு பொருளாதாரத்தை' பெருக்குவதற்கு விரிவுபடுத்தி தனியார் ஆதாரங்களை குறிப்பிடத்தக்க அளவு பெறவேண்டும் என்று பரிந்துரைத்தது. இந்த தனியார்மயத்திற்கு உதவும் ஒழுங்குமுறை அமைப்பாகத்தான் இந்த அதிகம் மையப்படுத்தப்பட்ட உயர் அமைப்பு செயல்படப்போகிறது. தற்போது கல்வி நிறுவனங்களை உலக அளவில் போட்டியிடத்தக்கதாக ஆக்குவோம் என்பதை தற்போதைய பிரச்சார முழக்கமாக எடுத்துள்ளனர்.

### இதுவரை உருவாகாத ஜியோ இன்ஸ்டிட்யூட்டிற்கு சந்தேகத்திற்கிடமான வழியில் மாண்புமிக்க கல்வி நிறுவனம் அந்தஸ்து

தற்போது மேலே குறிப்பிட்ட இரண்டவது பிரச்சினைக்கு வருவோம், இல்லாத ஜியோ இன்ஸ்டிட்யூட்டிற்கு ஐஓஇ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இது இயல்பாகவே நாடுமுழுவதும் கடுமையான எதிர்ப்பையும் விமர்சனத்தையும் சந்தித்தது. இதனால் இந்த முடிவை நியாயப்படுத்த வேண்டிய நிலைமை எம்ஹெச்ஆர்டிக்கு ஏற்பட்டது. அவர்கள் வெளியிட்ட விளக்கம் மற்றொரு அம்சத்தை அம்பலப்படுத்தியது. அதை சுருக்கமாகப் பார்ப்போம்.

இதற்கான கதை வசனம் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லியின் 2016 பட்ஜெட் உரையில் எழுதப்பட்டது. '10 அரசு மற்றும் 10 தனியார் உயர் கல்வி நிறுவனங்களை' தேர்ந்தெடுத்து 'உலகத் தரம் வாய்ந்த கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களாக உருவெடுக்கவைப்பதற்காக' ஒழுங்குமுறைக் கட்டமைப்பை வழங்கி அதன் மூலம் 'சாதாரண இந்தியர்களுக்கு உயர்தரமிக கல்வியை கிட்டச் செய்யவைக்கப்படும்' என்று அந்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தனிசிறப்புமிக்க கல்வி நிறுவனங்களைத் தேர்வு செய்வதற்காக அதிகாரமிக்க நிபுணர் குழுவை நியமிப்பதற்கான ஒரு திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வகுத்தது. அதன்படி உயர்கல்விக்கு நிதிவழங்கும் முகமை (ஹெச்இஎஃப்ஏ) அமைக்கப்பட்டது. அதற்கு ரூ1000 கோடியும் மூலதனமாக ஒதுக்கப்பட்டது. சந்தையில் நிதி திரட்டியும் அத்துடன் கார்ப்பொரேட் சமூகப் பங்களிப்பு மூலமும் நிதியைப் பெற்று உயர்கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி உதவி அளிப்பது என்று திட்டமிடப்பட்டது. இது உயர்கல்வியை தனியார்மயம், சரக்குமயமாக்குவதென்ற திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் உத்வேகமூட்டுவதையே காட்டுகிறது.

இதன் மூலம் பயனடைபவர்களுக்கு ஏற்ற வகையில் கொள்கைகளையும் விதிகளையும் மாற்றி எழுதுகின்ற மற்றொரு வேலையில் மத்திய அரசாங்கம் இறங்கியது. 29 ஆகஸ்டு 2017இல் வெளியிட்ட அரசிதழில் உயர்தர பன்வகை பாடப் பிரிவுகள் அல்லது ஒன்றோடொன்று சேர்ந்த போதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களோடு இணைந்து செய்தல், அதுபோல நாட்டின் தேவையான வளர்ச்சிக்கு உகந்த, அதேபோல கணிசமான அளவில் வெளிநாட்டு அல்லது வெளிநாட்டில் தகுதிபெற்ற ஆசிரியர்களையும் இந்திய மற்றும் வெளிநாட்டு மாணவர்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பவற்றை பல்வேறு தேவைகளாகப் பட்டியலிட்டது. ஆசிரியர்கள் அவ்வப்போது ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடவேண்டும், தகுதி–அடிப்படையிலான வெளிப்படையான சேர்க்கை, நிதி இல்லை என்று கூறி தகுதியான மாணவரை சேர்க்காமல் இருக்கக்கூடாது, ஆசிரியர் மாணவர் விகிதம் 1:20க்கு குறைவாக இருக்கக்கூடாது, நல்ல ஆய்வகங்கள், நூலக வசதி மற்றும் மாணவர்களுக்கான வசதிகள் என இவையெல்லாம் உலக தரத்தில் இருக்க வேண்டும் என்பவையும் பட்டியலிடப்பட்டன. இவையெல்லாவற்றையும் ஏற்கனவே செயல்பட்டுவரக்கூடிய கல்வி நிறுவனங்களால்தான் பூர்த்திசெய்ய இயலுமே தவிர இதுவரை பூர்வாங்க வேலைகூட தொடங்கப்படாத ஒரு கல்வி நிறுவனத்தால் பூர்த்தி செய்ய முடியாது.

ஆனால் இப்போதிருக்கும் மிகச்சிறந்த கல்வி நிறுவனங்கள் கூட பூர்த்தி செய்யுமா செய்ய முடியாதா என்ற நிலையில் தங்களது இந்த தேவைகளையெல்லாம் நோக்கமாக கொண்டிருப்பதாக உறுதிமொழிகளையும் அளிக்கவல்ல கல்வித் தொழிலில் ஈடுபடவல்ல மிகப்பெரிய வசதிபடைத்தவர்கள் அளிக்கும் விண்ணப்பத்தையும் ஏற்கும் விதமாக இந்த அறிக்கை 'இன்னும் தொடங்கப்படாத கல்விநிறுவனத்தையும் சேர்ப்பதற்கான பிரிவுகளும் தனியாக ((Clauses 4.2.11(i)(b), 6.1 (iii), 6.1 (iv)) சேர்க்கப்பட்டது. 'உலகத்தரமிக்க கல்விக் கட்டமைப்பை உருவாக்க வரும் பொறுப்புணர்வு மிக்க தனியார் மூலத்தனத்திற்கு இடமளிக்க வேண்டும்' என்ற உயரிய நோக்கத்தோடுதான் இது சேர்க்கப்பட்டதாக தகவல் தொடர்பு அமைச்சகம் நியாயப்படுத்தியது. எது எப்படியோ, ஜியோ இன்ஸ்டிட்யூட், தேவையான நிலம், நிதி, உயர் கல்வித் தகுதியுடனான மையக் குழுவைத் தேர்ந்தெடுத்தல், நோக்கத் திட்டம் போன்ற நிபந்தனைகளை பெற்றுவிட்டது என்று அதிகாரமிக்க நிபுணர்குழுவின் நிபுணர்கள் (EEC) கண்டுபிடித்துவிட்டனர்.

ஆனால் வேறு சில மிக முக்கியனான விஷயங்களை அவர்கள் புறக்கணித்துவிட்டனர். முதலில், வளர்ந்த நாடுகளில் இருப்பதைப் போன்று உலகத் தரமிக்க நிறுவனங்களை அமைப்பதற்கு, வெளிநாட்டு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இன்னும் இது போன்ற வசதிகளை உருவாக்கும் போது இதனால் நாட்டில் உள்ள இதர உயர்கல்வி நிறுவனங்களுக்கு நிதிப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் திட்டமிட வேண்டாமா?

இரண்டாவதாக, உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் என்றால் அதில் சமுதாயத்திற்கு பற்றுறுதி கொண்ட ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று அர்த்தமாகுமா? மூன்றாவதாக, தங்களுடைய இருத்தலுக்காக தொடர்ச்சியாக ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளிநாட்டு கல்விநிறுவனங்களோடு தொடர்பையும் வைத்திருப்பதில் ஈடுபடும் ஆசிரியர்கள் இந்த நாட்டிற்கு உகந்த சமூக மற்றும் கலாச்சார அறிவை உருவாக்குதற்கு பற்றுறுதியோடு இருப்பார்களா? இந்த முக்கியமான தொடர்புடைய கேள்விகளுக்கு யார் பதிலளிப்பது?

ஆனால் நாடகம் தொடங்கிவிட்டது. முகேஷ் அம்பானியும் அவரது ஆலோசகரும் பாஜக–தலைமையிலான அரசாங்கத்தின் நெருக்கமான நம்பிக்கைக்குரியவரும், சமீபத்தில சில ஆண்டுகளில் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர் போன்ற இன்னும் பல உயர்பதவிகளை அனுபவித்தருமான வினய் ஷீல் ஒபெராயும் ரிலையன்ஸ் பவுண்டேஷனின் ஜியோ நிறுவனத்திற்காக விண்ணப்பமளித்து பேசினர். இந்த திட்டத்திற்கான விதிமுறைகளை வகுப்பதிலும் அமல்படுத்துவதிலும் திரு ஒபெராய் இருந்துகொண்டே ஜியோ நிறுவனத்திற்கும் வாதாடுவதில் எந்தத் தவறோ அல்லது முரண்பாடோ இல்லை என்று மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அறிக்கை வெளியிட நேர்ந்தது, ஆனால் இதற்கு முரணாக உண்மைகள் இருக்கின்றன. ஜியோ இன்ஸ்டிட்யூடின் வேந்தராக பாஜக ஆதரவு விஞ்ஞானி ஆர்ஏ மாஷெல்கார் நியமிக்கப்பட இருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஆக நயவஞ்சகக் கூட்டணி அம்பலமாகியுள்ளது.

வேறு சில கேள்விகளும் உள்ளன. குறிப்பிட்ட முன்னணி பல்கலைக்கழகங்களை 12 டிசம்பர் 2017க்குள் விண்ணப்பிக்குமாறு யுஜிசி அழைப்பு விடுத்தது என்று பல்கலைக்கழகங்களைத் தரப்படுத்தும் உலகின் முன்னணி மூன்று நிறுவனங்களில் ஒன்றான டைம்ஸ் ஹையர் எஜுகேசன் (டிஹெச்இ) 31 மே 2018 அன்று தெளிவுபடுத்தியது. ஆனால் சில வாரங்கள் கழித்து 22 பிப்ரவரி 2018 வரை கால அவகாசத்தை யுஜிசி நீடித்தது. டிசம்பர் 2017க்குப் பிறகு விண்ணப்பித்த பல்கலைக்கழகங்களின் பெயர்களை வெளியிட அது மறுத்தது. சிலரது வேண்டுகோளுக்கு இணங்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டதாக 12 ஜுலை 2018 அன்று தி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகைக்கு பதிலளித்த பேட்டியில் மனிதவள மேம்பாட்டு அமைச்சக செயலாளர் தெரிவித்தார்

அதன் பிறகு ஜுலை 9 அன்று ஜியோ இன்ஸ்டிட்யூட் உள்ளிட்ட 6 கல்வி நிறுவனங்களை மாண்புமிக்க கல்வி நிறுவனங்களாக இஇசி பரிந்துரைத்துள்ளதாக பத்திரிகை செய்தி வெளியானது. ஆனால் 6 நிறுவனங்களை மாண்புமிக்க கல்வி நிறுவனங்களாக தேர்ந்தெடுத்த இஇசிஇன் அறிக்கை, அதேபோல் அதன் மீதான யுஜிசியின் தீர்மானம் ஆகியவை ஜுலை 11 அன்று யுஜிசியின் இணையதளத்தில் ஏற்றப்பட்டிருந்த நிலையில் திடீரென இணையதளத்திலிருந்து அவை நீக்கப்பட்டன. ஆனால் 1975இல் வெளியான ஆவணங்கள் கூட இணையதளத்தில் இன்னும் இருக்கின்றன.

மற்றொருபுறம், இதுவரை உருவாகாத ஜியோ இன்ஸ்டிட்யூட்டும் அந்த 6 மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள் பட்டியலில் இருப்பது மிகப்பெரிய விமர்சனத்தை உருவாக்கியதால் 30 ஜுலை அன்று பாராளுமன்றத்தில் பதிலளித்த மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜவ்டேகர் : 'அடுத்த மூன்று ஆண்டுகளில் பசுமைக்கள வகையின் கீழ் 'பல்கலைக்கழகமாகவல்ல தனிசிறப்புமிக்க நிறுவனம்' அமைப்பதற்கான நோக்கக் கடிதம் ஜியோ இன்ஸ்டிட்யூட் என்ற ஒரே நிறுவனத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டது' என்று கூறினார். இதுவும் ஒரு பொய். அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, பசுமைக் கள இன்ஸ்டிட்யூட் மட்டுமல்லாது, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் அ) நோக்கமுடையவை என்று அறிவிக்கப்படும், அதோடு ஆ) இஇசிக்கு அளித்த விளக்கப்படி 3 ஆண்டுகளில் செயல்படத் தொடங்கும்.

ஆக ஜியோ இன்ஸ்டிடியூட்டிற்கு மாண்புமிக்க அந்தஸ்து வழங்கிய முறையில் அரைகுறை உண்மைகள், பொய்கள், தில்லுமுல்லுகள், முறைகேடுகள், ஊழல் பாரபட்சவாதம் ஏராளமாக உள்ளன. இது எல்லாம் மாண்புமிக்க தன்மையை பெறுவதற்காக மட்டுமல்ல, மாறாக மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கூறுவதுபோல் 'காலப்போக்கில் இவை உலகின் முன்னணி 100 கல்வி நிறுவனங்களில் ஒன்றாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை அடைவதற்கு... அந்த கல்வி நிறுவனங்கள் மொத்த மாணவர்களில் 30% வரை வெளிநாட்டு மாணவர்களை சேர்ப்பதற்கும்; ஆசிரியர்களில் 25% வரை வெளிநாட்டு ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கும்; தனது பாடப்பிரிவுகளில் 20% வரை ஆன்லைன் மூலம் வழங்கவும்; யுஜிசியின் அனுமதி பெறாமலேயே

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஆதார் திட்டம்

# மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆளும் வர்க்கத்தினர் கைகளில் கிடைத்திருக்கும் மற்றுமொரு ஆயுதம்

5ம் பக்கத் தொடர்ச்சி

கிடைத்துவிடும். இந்த விவரங்கள், தகவல்கள், தரவுகளைக் கொண்டு தனிநபர்களின் ப்ரொஃபைலை யார் வேண்டுமானாலும் தயாரிக்கலாம். இந்த தரவுகளையும் ப்ரொஃபைலையும் யார் வேண்டுமானாலும் வணிக நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது அரசியல் காரணங்களுக்காகவும் பயன்படுத்தலாம். ஒருவரது ரசனைகள், விருப்பங்கள், தேர்வுகள், சிந்தனைகள், சித்தாந்த ஈர்ப்புகள், பொருளாதார நிலைமைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வதன் மூலம் வாக்குகளாகவும் மாற்றிக்கொள்ளலாம். ஒருவரது மனப்பான்மையை தெரிந்துகொண்டு குற்ற நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகள், அறத்திற்கும் ஒழுக்கத்திற்கும் புறம்பான செயல்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடுத்தத் தூண்டலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, தனிநபர் ப்ரொஃபைலைத் தயாரித்து அரசாங்கமானது தனக்கு எதிரான மனநிலை, சிந்தனை, செயல்பாடுகளில் ஈடுபவோர் ஆகியோரைக் குறிபார்த்துக் கண்டறிந்து அவர்களை இல்லாமலாக்குவதற்கு முயலலாம். மக்களை மூளைச்சலவை செய்வதற்கு ஆதார் மிகவும் உதவிகரமாக இருக்கும். இவையெல்லாவற்றுக்காகவும் தகவல்களையும் தரவுகளையும் சேகரிக்கவும் விற்பதற்கும் ஒரு கூட்டம் உருவாகும். இக்கூட்டம் முறையற்ற வகையில் தரவுகளை சேகரித்து அவற்றை விற்று சம்பாதிக்கும். இவ்வகையில், ஊழலை ஒழிப்பதற்கென்று கொண்டுவரப்படும் ஆதார் புதிய ஊழலை உருவாக்குகிறது.

ஒருபுறம் சுரண்டப்படும் கோடானுகோடி மக்களையும் மறுபுறம் சுரண்டுகின்ற விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒரு சில உடைமையாளர்களையும் கொண்ட இரு வேறு வர்க்கங்களாகப் பிளவுபட்ட சமுதாயத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்தியாவும் ஒரு முதலாளித்துவ நாடுதான். லாபம், மேலதிக லாபம் என்பதையே லட்சியமாகக் கொண்ட இம்முதலாளித்துவ சமுதாயத்தின் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கு உள்ளாகும் கோடானுகோடி உழைக்கும் மக்கள் தங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் போராட்டங்களில் ஈடுபடும்போது குண்டாந்தடிகளையும், துப்பாக்கிகளையும், தோட்டாக்களையும் சந்திக்க நேரிடுகிறது. இத்தகு கசப்பான கடுமையான தாக்குதலை சந்தித்தபின்னர், அவர்கள் எதிர்ப்புக்குரல் எழுப்பவே தயங்கிக்கொண்டு அச்சத்திலும் பீதியிலும் வாழ்கிறார்கள், இத்தகைய நிலையில் தனது குடிமக்களை வைத்திருக்கும் அரசாங்கம், அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றோ அவர்களுக்கான பலன்கள் அவர்களிடம் முழுமையாகச் சென்றடையவேண்டும் என்றோ நல்லெண்ணம் கொண்டு எந்தத் திட்டத்தையும் அமல்படுத்தாது என்பதை ஆணித்தரமாக இங்கே வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்த முதலாளித்துவ அமைப்பு முறையில் குறிப்பிட்ட காலமுறை இடைவெளியில், அதாவது இந்தியாவில் ஐந்தாண்டுக்கொருமுறை தேர்தல் நடத்தப்பட்டு ஏதேனும் ஒரு கட்சி ஆட்சிக்கட்டிலில் அமர்த்தப்படுகிறது. இதுவே மிகப்பெரிய ஜனநாயக நடைமுறையாக மக்கள் மத்தியில் காட்டப்படுகிறது. இந்த போலி ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு மேன்மேலும் தேய்ந்து வரும் நம்பிக்கையை சற்றேனும் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவும் இந்த ஜனநாயக கட்டமைப்பிற்குள்ளேயே மக்களை முடக்கிப்போட்டு தங்கள் சுரண்டல் ஆட்சியை தடையின்றி நடத்திச் செல்வதற்காகவும் தேர்தல்கள் மூலம் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்ற மாயை திரும்பத்திரும்ப பொதுப்புத்தியில் ஏற்றப்படுகிறது.

இம்மாயை தக்க வைத்துக்கொள்வதற்காக கொண்டுவரப்படுகின்ற திட்டங்களில் ஒன்றுதான் ஆதார் ஆகும். அதற்காகத்தான் இத்திட்டம் பல்வேறு முறைகேடுகளைத் தடுத்து மக்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்படுத்தப்போவதாக பரப்பப்படுகிறது.

இவ்வளவு காலம் சட்ட அங்கீகாரம் இன்றி செயல்படுத்தப்பட்டுவந்த இத்திட்டத்திற்கு தற்போது சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைத்து அரசியல் சாசனத்திற்கு உட்பட்டதுதான் என்று உச்சநீதி மன்றமே முத்திரை குத்திவிட்ட பிறகு எதிர்காலத்தில் இத்திட்டம் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படும் என்பதை யாரறிவார்? புதுப்புது ஊழல்கள், புதுப்புது இடைத்தரகர்களையும் ஊழல்வாதிகளையும் உருவாக்கும். மக்களுக்கு கிடைக்கும் சொற்ப நலத்திட்டங்களும் எதிர்காலத்தில் கிடைக்காமற்போகும்போது சேகரித்த தரவுகள் எதற்கெல்லாம் பயன்படுத்தப்படும் என்ற கேள்விக்கு இயல்பாகவே நமக்குக் கிடைக்கும் விடை திகிலூட்டுவதாக உள்ளது.

இதைப்பற்றிய பகுப்பாய்வில், நமக்கு இறுதியாகக் கிடைக்கும் பதில் யாதெனில், ஆளும் முதலாளித்துவவாதிகளின் கைகளில் கொடும் விஷம் கொண்ட வேவு பார்க்கும் முறையை ஒப்படைப்பதுதான் ஆதார் திட்டத்தின் நோக்கம் என்பதேயாகும். பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் என்ற பெயரில் மக்களை பயமுறுத்தி வைப்பதுதான் ஆதாரின் உண்மையான, ஆனால் சொல்லப்படாத, குறிக்கோளாகும். ஜனநாயக வெகுஜன இயக்கங்களை வளர்த்தெடுப்பதிலும் பெருவாரியாக மக்களை அவற்றில் ஈடுபடுத்துவதிலும் பெரும் தடையாக விளங்கப்போவதுதான் ஆதார்.

அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் யார், எதிர்க்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருப்போர் யார், எந்தெந்த அமைப்புகள் அரசின் மீது விமரிசன பூர்வமான கருத்தைக் கொண்டிருக்கின்றன, இவற்றுக்கு ஆதரவளிப்போர் யார் என்றெல்லாம் தெரிந்துகொண்டு அவர்களது நடவடிக்கைகளை தொடர்ச்சியான வேவுக்கு உட்படுத்துவதற்கான அபாயகரமான உளவுக்கருவியே ஆதார் ஆகும்.

இவ்வாறான வழிகளில் வேவு பார்த்து அரசாங்கத்திற்கான எதிர்ப்புக்குரலை வருமுன்னர் முன்கூட்டியே தடுப்பதற்கு உதவுகின்ற திட்டத்திற்கு நல்லெண்ணமும் ஜனநாயக சிந்தனையும் கொண்ட எவரும் ஆதரவளிக்க முடியாது என்பதையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். இச்சதியை மக்கள் புரிந்துகொண்டு அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களும் ஒன்றுபட்டு திரண்டெழுந்து இத்திட்டத்தை எதிர்க்கவேண்டும். எவ்வளவு விரைவில் இத்தகைய போராட்ட இயக்கத்தை துவக்குகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்ற செய்தியை அறைகூவலாக விடுக்கிறோம் ■

## இந்திய உயர் கல்வி ஆணையம்

# உயர் கல்வி மீது வரவிருக்கும் பேரழிவைத் தடுத்திட சக்திவாய்ந்த மக்கள் இயக்கம் தேவை

6ம் பக்கத் தொடர்ச்சி

உலகின் முன்னணி 500 கல்வி நிறுவனங்களுடன் கல்வி கூட்டுறவு வைத்துக்கொள்ளவும்; எந்த கட்டுப்பாடுமில்லாமல் வெளிநாட்டு மாணவர்களிடம் கட்டணம் வசூலித்துக்கொள்ளவும்; பாடப்பிரிவுகளை தங்கள் வசதிக்கு மாற்றிக்கொள்ளவும்' தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படும்.' அதாவது இவை எல்லாம் உலக வர்த்தக அமைப்பு கூறியதுபடி காட்ஸ் ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்கு ஏற்ப கல்வி உள்ளிட்ட சேவைத் துறைகளை விலைபொருட்களாக மாற்றி உலகச்சந்தையில் பரிமாறிக்கொள்ளும் சரக்காக மாற்ற இசைவாக உள்ளன. ஆக மாண்புமிக்க கல்விநிறுவனங்களாகத் தகுதிபடைத்த கல்வி நிறுவனங்கள் ஏற்கனவே உள்ள நிலையில் அவற்றையெல்லாம் அப்படி ஆகவிடாமல் பலிகொடுத்து ஆசியாவின் ஆகப்பணக்கார ஏகபோகத்தின் கல்வி நிறுவனமான முகேஷ் அம்பானியின் ஜியோ மேலும் உலக பணக்காரராக பணம் ஈட்டுவதற்கான பாதை வகுக்கப்பட்டுள்ளது.

வேறு சில உதாரணங்களையும் பார்ப்போம். மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய ஐஐடிக்கள் 23 உள்ளன, அவற்றில் திருப்பதி, பாலக்காடு, தார்வாத், பிலாய், கோவா மற்றும் ஜம்மு ஆகிய 6 ஐஐடிக்கள் 2015–2016களில் உருவானவை. இவை எல்லாமே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் அல்லது திறன்மிகு கல்வி நிறுவனங்கள் என்று பட்டியலிடப்பட்டுள்ளன. ஐஐடி – பாம்பே, ஐஐடி டில்லி ஆகிய இரண்டு ஐஐடிக்கள் தற்போது முன்மொழியப்பட்டுள்ள மாண்புமிக்க கல்வி நிறுவனங்களாக ஆக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கு பெருமளவிலான நிதியுதவி கிடைக்கும். ஆனால் இரண்டாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்த ஆறு ஐஐடிக்களில் டைரக்டர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர், இதுவரை போர்டு ஆப் கவர்னர்களை அரசாங்கம் நியமிக்கவே இல்லை.

பொதுவாக ஐஐடிக்கள் எல்லாமே ஊதியம், கட்டிட வசதிகளுக்கான செலவுகளைத் தவிர இதர செலவீனங்களை 'தற்போது பொது நிதிவழங்கும் விதிகள் 2017 வழிகாட்டுதல்படி அதிக கட்டணம் வசூலித்து சிறப்பியல்பு தொழிற்பாடங்கள் நடத்துவது அல்லது முன்னாள் மாணவர் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்திக்கொள்வது அல்லது மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் கனரா வங்கியின் கூட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உயர்கல்விக்கு கடன் வழங்கும் ஏஜென்சியிடம் கடன் பெற்றோ பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். ஆக இங்கும் வியாபாரமயம்தான் ஊக்குவிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு டில்லி ஐஐடிஇன், பஞ்சகாவ்ய (பசு அறிவியல்) ஆராய்ச்சி என்ற திட்டத்தை தேசிய அளவில் முன்னெடுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மையம் (சிஆர்டிடி) தனது சந்தேகத்திற்கிடமான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக அதிக நிதி உதவியை பெறுகிறது, அதே நேரத்தில் மற்ற துறைகள் நிதிப் பற்றாக்குறையால் ஹெச்இஎப்ஏவிடம் கடனை எதிர்பார்த்துள்ளன. அதாவது அரசாங்கத்தின் விருப்பப்படி செயல்படும் துறைக்கு நிதி உதவியும், உண்மையான அறிவியல் ஆராய்ச்சி என்றால் நிதி இல்லை என்பதும் கொள்கையாக செயல்படுத்தப்படுகின்றன.

சுருக்கமாக சொன்னால், இந்திய உயர்கல்வி ஆணையமும் (ஹெச்இசிஐ) மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள் என்ற அறிவிப்பும் நாட்டின் கல்வியின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடவே இல்லை. யுஜிசியைக் கலைத்துவிட்டு கொண்டுவரப்பட இருக்கும் ஹெச்இசிஐ தன்னாட்சியை தடுத்து, வியாபாரமயத்தை மேலும் ஊக்குவித்து எவ்வித எதிர்ப்புமின்றி கல்வியைத் தனியார்மயம்–வியாபாரமயமாக்கும் மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையை, குறிப்பாக பாஜக அரசாங்கத்தின் கல்வியைக் காவிமயமாக்கும் நடவடிக்கைக்கு ஏற்றவாறு கல்வியை மத்திய பாஜக அரசாங்கத்தின் இறுகியபிடிக்குள் கொண்டு செல்ல உதவும்.

மற்றொருபுறம் மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள் என்பது ஏற்கனவே கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை பெருமளவு அபகரித்துக்கொண்டு ஏற்கனவே இருக்கும் மற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களை நிதிப் பற்றாக்குறைக்குள் தள்ளிவிடும். அதன் மூலம் அந்த கல்வி நிறுவனங்களும் கல்விக் கட்டணங்களை உயர்த்தி, மாணவர்களின் கட்டணத்தில் கல்வி வழங்கும் சுயநிதிக் கல்லூரிகளாக மாற்றப்பட்டு, கல்வி முழுமையாக தனியார்மயம் வியாபாரமயமாக்கப்படும். மக்களின் அறியாமையில்தான் ஆட்சியாளர்களின் அதிகாரம் உள்ளது என்பது நன்கறிந்ததே. எனவேதான் கல்வியை ஆட்சியாளர்கள் தொடர்ந்து குறிவைத்துத் தாக்குகின்றனர். மாண்புமிக்க கல்வி நிறுவனங்கள் பட்டியலில் இதுவரை உருவாகாத ஜியோ இன்ஸ்டிட்யூட்டை சேர்த்தது கல்வியை முற்றிலும் தனியார்மயம்–வியபாரமயமாக்கும் போக்கை இறுதி செய்வதற்காக தங்களுக்கு ஆதரவான கார்ப்பொரேட்டின் நலனுக்கு முற்றிலும் அடிபணிந்து சேவகம் செய்யும் நடவடிக்கை குறைந்தபட்ச நேர்மைகூட இல்லாமல் கல்வியைக் காவுகொடுக்கும் அப்பட்டமான மோசடி நடவடிக்கையே ஆகும். யுஜிசியைக் கலைத்துவிட்டு இந்திய உயர்கல்வி ஆணையம் அமைப்பது, ஜியோ இன்ஸ்டிட்யூட்டை மாண்புமிக்க கல்வி நிறுவனமாக அறிவித்தது போன்ற கல்வி விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக கல்வி சமுதாயத்தினர் மட்டுமல்லாது கல்வியை நேசிக்கும் அனைவரும் ஒருங்கிணைந்து சக்திவாய்ந்த கல்வி இயக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டும் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)இன் 3வது கட்சி காங்கிரஸையொட்டி தமிழ்நாடு மாநில மாநாடு

நமது அன்பிற்குரிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)இன் 3வது கட்சி காங்கிரஸை (அகில இந்திய மாநாடு) ஒட்டி தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி தனது மாநில மாநாட்டை சென்னையில் அக்டோபர் 21 –22, 2018 ஆகிய இரு நாட்களில், சேப்பாக்கம் சென்னை நிருபர்கள் சங்கக் கூடத்தில் சிறப்பாக நடத்தியது.

இம் மாநில மாநாட்டை ஒட்டி முன்னதாக நான்கு மாவட்டங்களில் மாவட்ட மாநாடுகள் நடைபெற்றன. அம்மநாடுகளில் செயலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முறையே தோழர் K சந்திரன் சென்னை மாவட்ட செயலாளர், தோழர் T சத்தியமூர்த்தி தேனி–திண்டுக்கல் மாவட்ட செயலாளர், தோழர் M J வால்டேர் மதுரை மாவட்ட செயலாளர் மற்றும் தோழர் A அனவரதன் விழுப்புரம்–கடலூர் மாவட்ட செயலாளர். விருதுநகர், சேலம்–கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கட்சி யூனிட் கூட்டங்களும் நடத்தப்பட்டன. அதற்கு முன் வட்டார அமைப்புக் கமிட்டி மாநாடுகளும் மேற்கூறிய மாவட்டங்களில் நடந்தேறின.

கட்சியின் நகல் ஆய்வுகளான தேசிய சூழ்நிலை மீதான ஆவணமும் சர்வதேசிய சூழ்நிலை மீதான ஆவணமும் உறுப்பினர்களால் மாநாடுகளில் விவாதிப்பட்டன.

மாநில மாநாட்டின் முதல்நாள் காலை திறந்த அமர்வில் கூட்டத்தை மாநில அமைப்புக் கமிட்டி செயலாளர் தோழர் A ரெங்கசாமி தலைமை தாங்கினார். மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் K ராதாகிருஷ்ணாவும், மத்திய ஸ்டாஃப் உறுப்பினர் தோழர் K ஸ்ரீதரும், மத்திய ஸ்டாஃப் உறுப்பினர் தோழர் சங்கர் கோஷ் அவர்களும் மாநாட்டிற்கு பார்வையாளர்களாகவும் கட்சியின் மத்தியக் கமிட்டியால் அனுப்பிவைக்கப்பட்டனர்.

மாநாட்டின் துவக்கத்தில் நமது கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இக்காலக் கட்டத்தின் மாபெரும் மார்க்சிய தலைவர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் உருவப்படத்திற்கு தோழர் K ராதாகிருஷ்ணா மலர்மாலையிட்டு மரியாதை செய்வித்தார். அதேபோன்று, தோழர் சங்கர் கோஷ், இதுகாறும் உலகெங்கும் பாட்டாளிவர்க்கப் புரட்சிகரப் போராட்டங்களிலும் ஜனநாயக இயக்கங் களிலும் பங்குகொண்டு உயிர்நீத்த தியாகிகளுக்கு செவ்வணக்கம் செய்து மலர் வளையம் வைத்தார். கட்சித் தோழர்கள் அனைவரும் தோழர் சிப்தாஸ் கோஷ் மீதான பாடலை இசைத்தனர்.


தோழர் A ரெங்கசாமி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்

தோழர் A ரெங்கசாமி தனது தலைமை உரையில் தமிழ் நாட்டு மக்கள் சந்தித்துவரும் பிரச் சினைகளைப் பற்றி குறிப்பிட்டார். மாநிலத்தில் ஆளும் அஇஅதிமுக அரசாங்கமும் மத்தியில் ஆளும் பாஜகவும் எடுத்துவரும் மக்கள் விரோதத் திட்டங்களை மக்கள் எதிர்க்கும் போதெல் லாம் அவற்றைச் சகித்துக் கொள்ள இயலாமல் மக்களின் ஜனநாயகப் போராட்டக் குரல்வளையை நசுக்குகின்றன என்றார். ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்த போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டை நடத்தி மக்களைக் கொன்றதையும் சேலம்–சென்னை 8 வழிச் சாலைத் திட்டத்தை அமைதியான முறையில் எதிர்த்த விவசாயிகளையும் மக்களையும் ஒடுக்கி சிறையில் அடைப்பதையும் அவர் கண்டித்தார். மற்றெல்லா கட்சிகளும் போராட்டப் பாதையை விட்டுவிட்டன என்றார். தோழர் A ரெங்கசாமி, இனி போராடும் மக்களுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தோழர்கள்தான் தலைமைப் பொறுப்பை ஏற்று மக்களை நசுக்கி ஒடுக்கும் முதலாளித்துவத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றார்.

தோழர் சங்கர் கோஷ் உரையாற்றுகையில், கட்சித் தோழர்கள் எல்லோரும் தம்மை சித்தாந்த அரசியல் கலாச்சாரத் தரத்தில் போதிய அளவும் தரம் உயர்த்திக் கொண்டு கட்சியின் முன்னுள்ள கடமைகளை நிறைவேற்ற வரவேண்டும் என்றார். இன்றைய சூழ்நிலையில் உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் உழைக்கும் மக்கள் சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளையும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளையும் அவர் சுட்டிக்காட்டி னார். நமது கட்சியின் 2வது காங்கிரஸ் 2009க்குப் பிறகு உலகச் சூழ்நிலையில் அடிப்படை மாற்றங்கள் நடக்கவில்லை என்றாலும் பல்வேறு புதிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்ற அவர், ‘முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி’ திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல போராட்ட யுக்தியை மிகச் சரியாக வகுத்தெடுக்க அம் மாற்றங் களை சரியாக ஆய்வுசெய்யவேண்டும் என்றார்.

கட்சியின் 3வது காங்கிரஸ் நடைபெறும் இந்த வேளையில் தேசிய சர்வதேசிய சூழ்நிலைகளை ஆய்வுசெய்து நம் முன் கட்சி வைத்துள்ள கடமை களை செவ்வனே நிறைவேற்ற, போராட்டங்களில் சோதிக்கப்பட்டு முன்னேறிய இளம் தோழர்கள் அனைத்து மட்டங்களிலும் தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என தோழர் K ராதாகிருஷ்ணா தனது உரையில் சுட்டிக்காட்டினார். மார்க்சிச லெனினிசத்தின், தோழர் சிப்தாஸ் கோஷ் அவர் களால் வளர்த்தெடுக்கப்பட்டு செழுமைப்படுத்தப் பட்ட, புரிதலை ஏற்றுக் கொள்ளாமல் இந்தியாவில் மட்டுமல்ல, எங்குமே புரட்சி சாத்தியமல்ல என அவர் வலியுறுத்தினார். முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல் ஒடுக்குமுறையிலிருந்து உழைக்கும் வர்க்கம் விடிவு பெற தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனை மிகவும் அத்தியாவசியமாகும் என தோழர் ராதாகிருஷ்ணா விளக்கினார்.

மாநாட்டில் பிரதிநிதிகள் அமர்வுகள் அன்றைக்கு மாலையிலும் அடுத்த நாளன்றும் நடைபெற்றன. தோழர்கள் A அனவரதன், V P நந்தகுமார், K சந்திரன் ஆகியோரை தலைமைக் குழுவாகக் கொண்டு பிரதிநிதிகள் அமர்வு துவங்கியது. முதல் அமர்வில் சர்வதேசிய சூழ்நிலை குறித்த கட்சியின் நகல் ஆவணம் விவாதிக்கப்பட்டது. அடுத்த நாள் காலை அமர்வில் தேசிய சூழ்நிலை விவாதிக்கப் பட்டது. பிரதிநிதிகள் பல்வேறு திருத்தங்களையும் பரிந்துரைகளையும் முன்வைத்தனர்.

இரண்டாம் நாள் அக்டோபர் 22 அன்று மாலை அமர்வில் கட்சியின் ஸ்தாபன அறிக்கை மாநிலச் செயலாளரால் பிரதிநிதிகள் முன்பு வாசிக்கப்பட்டது. அறிக்கையில் விடுபடல்களும் சேர்த்தலும் இருந்ததை பிரதிநிதிகள் விமரிசனத் துடன் சுட்டிக் காட்டினர். இறுதியாக திருத்தங் களுடனான அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தோழர் A ரெங்கசாமியை மாநிலச் செயலா ளராகவும் 11 தோழர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட கட்சியின் புதிய மாநில அமைப்புக் கமிட்டியை தோழர் K ராதாகிருஷ்ணா அறிவித்தார். இந்த 12 தோழர்களும் ஜார்க்கண்ட் மாநிலத்தில் காட்ஷீலாவில் நவம்பர் 21முதல் 25வரை நடை பெறும் 3வது கட்சி காங்கிரஸில் பங்கேற்பர் என அறிவித்தார்.

மாநாட்டில் பங்குபெற்ற பிரதிநிதிகளையும் பார்வையாளர்களையும் தோழர் K ஸ்ரீதர் வாழ்த்திப் பாராட்டிப் பேசினார். புதிய மாநில அமைப்புக் கமிட்டியின் தலைமையில் தமிழ்நாடு பல்வேறு புரட்சிகரப் போராட்ட இயக்கங்களை களம் காணும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இறுதியாகப் பேசிய தோழர் K ராதாகிருஷ்ணா, தமிழ்நாட்டில் கட்சி பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து சோதனைகளையும் கடந்து தற்போது மிகவும் வலிமை வாய்ந்ததாக எழுந்துள்ளது எனக் குறிப்பிட்டார். தமிழகத்தில் இனி நமது கட்சி மிகவேகமாக வளர்ந்து கட்சியின் கேடர்களுக்கும் மக்களுக்கும் வலிமையான தலைமையை வழங்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேசப் பண் இசையுடன் கட்சியின் மகத்தான 3வது காங்கிரஸை ஒட்டிய மாநில மாநாடு முடி வடைந்தது. புரட்சிகர கோஷங்களை முழங்கி தோழர் கள் கூட்டம் முடிந்து களைந்து சென்றனர் ■



அக் 21–22, 2018 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் தோழர் K ராதாகிருஷ்ணா, மத்தியக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார்


மாநில மாநாட்டில் கலந்துகொண்டோர்

## புதுச்சேரி மாநில மாநாடு

புதுச்சேரி மாநில தயாரிப்புக் கமிட்டியின் முதல் மாநாடு கடந்த 24.10.2018 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்கு தோழர் S லெனின் துரை மாநிலச் செயலாளர் தலைமை வகித்தார். அம்மாநாட்டில் தோழர் A அனவரதன் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர், தோழர் A ரெங்கசாமி, தமிழ்நாடு மாநிலச் செயலாளர் ஆகியோர் உரையாற்றினார். மாநாட்டில் தேசிய, சர்வதேசிய மற்றும் செயலாளர் அறிக்கைகள் விவாதித்து ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிறைவாக தோழர் K ஸ்ரீதர் மத்திய ஸ்டாப் உறுப்பினர் சிறப்புரையாற்றினார்.

தோழர் S லெனின் துரையை மாநிலச் செயலா ளராகவும் மூன்று தோழர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட புதுச்சேரி மாநில தயாரிப்புக் கமிட்டி நியமிக்கப்பட்டது. 3வது கட்சி காங்கிரஸில் இரு தோழர்கள் பங்கேற்பர். தொடர்ச்சியாக அக் 25, 2018 அன்று அரசியல் வகுப்பு நடைபெற்றது ■



புதுச்சேரியில் அக் 24, 2018 அன்று நடைபெற்ற மாநாட்டில் தோழர் K ஸ்ரீதர், மத்திய ஸ்டாப் உறுப்பினர் உரையாற்றுகிறார்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**